
# குருதேவர் அறிக்கை

## 1984- ஆண்டு விழா மலர்



தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி
குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்

# வைகாசி மாதப் பால்குடப் பெருவிழா

வெளியீடு :- 2—6—85

காணிக்கை ரூ




இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் சமய சமுதாய கலை இலக்கிய விழா. 12—6—84 அன்று நடைபெற்ற அருட்பணி விரிவாக்கத்திட்ட வைகாசி பால் குடப் பெருவிழாவின் ஒரு பகுதி



அருள்மிகு வீரமாகாளியம்மன் கருக்கொண்டு உலக அருளாட்சித் தலைவியாகப் பொறுப்பேற்றுள்ள குருகுலம்—இ. ம.இ.யின் அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமையகம், சித்தர் மாநகர் காரியேந்தல்பட்டி கொட்டாம்பட்டி.

---

தொடர்பு: தலைமைப் பொறுப்பாளர் சி, **கவிக்குமார்** 56, N.G.O. காலனி, பொன்னேரி-601204.



(காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் சத்தி இலிங்கத்திற்காக கட்டிய தஞ்சைப் பெரிய கோவில்)

# வாழ்த்துரை

தலைவர்,
இந்து மறுமலர்ச்சி இயக்கம்,

செம்பியம்,
18—5—85

அன்பு அடியார்களுக்கு,

நிலவறைப் புதையல்களாக நிலத்தடிப் புனலாக பதினெண் சித்தர்களின் கருத்துக்கள் எங்கே செல்லரிக்கும் ஏடுகளோடும், நைந்து போகும் தாள்களோடும்.........நின்று விடுமோ என்றஞ்சினோம்,

உண்மையான இந்து மத வரலாறுகள், தமிழர்களின் கலைகள், பண்பாடுகள், பொதுவுடைமைக் கருத்துக்கள், வாழ்வியல் தத்துவங்கள்.........எக்காலத்திலாவது தமிழிக மக்களைத் தாண்டி மனித குலமெங்கனும் சென்றடைய வேண்டும் என்று விரும்பினோம். அம்மாபெரும் எண்ணங்கள் குருகுலப்பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், செய்தியேடுகள், பொழுதுபோக்கு மன்றங்கள்........போன்ற எண்ணற்ற தொடர் பரப்பு அமைப்புக்கள் மூலம் செயல்படுதலே வழியாகும்.

இவ்வாயில்களில் ஒன்றுதான் 'குருதேவர் அறிக்கை' தமிழினம் தூங்கிய நிலையைக் கடந்து விழித்தெழுந்துவிட்டது என்பதற்குரிய சான்றாகத்தான் படித்த, படித்துக் கொண்டிருக்கின்ற இளைஞர்களின் பிஞ்சுக் கரங்களின் வளமான முயற்சியால் வலிமையான இலக்கியப்பணி துவங்கியுள்ளது. அதாவது சித்தர்களின் சாதனைகள் வாழவியல் வரலாறுகள், படைப்பிலக்கியங்கள், தத்துவங்கள், அருட்கொடைகள்.........முதலியவைகள் அறிவுலக ஆர்வலர்களின் கைகளுக்கு எட்டிவிட்டன இனி இவர்கள் தங்களுடைய வாழ்வியல் சாதனை பரப்பு என்னும் நிலங்களில் சித்தர்களைப் பற்றியச் செய்திகளையும் கருத்துக்களையும் பயிர் செய்தே தீருவார்கள் அந்தப் பயிரின் முதிர்ச்சி அறுவடை தமிழன், தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழர் நெறி, தமிழின வரலாறு.........என்ற சொற்களுக்குரிய விரிவானப் பொருளை உலகுக்கு வழங்குவதாக அமைந்திடும்,

இவ்வளவு பெரிய செயல் திட்டம் 'குருதேவர்' என்றபெயரால் வெளிவரும் சில ஆயிரம் அறிக்கைகளால்தான் சாதிக்கப்படுகின்றன என்ற பேருண்மையை நினைத்து நினைத்து பூரித்து பூரித்து பெருமகிழ்ச்சியடைகின்றோம் யாம்! இவ்வளர்ச்சி தொடர்ந்து மணம்வீச வேண்டுமாயின் அனைத்துவகை அடியார் திருக்கூட்டமும் தத்தம் பொறுப்பில் பலநூறு 'குருதேவர்' அறிக்கை விற்றுத்தர வேண்டுமென்பதே எம் வேண்டுகோள் எனவேதான், ஓராண்டு வாழ்வு வாழ்ந்து இவ்வாழ்வின் வெற்றிச் சின்னமாக வெளிவரும் 'ஆண்டுமலரை' சிந்தை நிறைந்து, நெஞ்சம் நிறைந்து உணர்வு மகிழ்ந்து வாழ்த்துக்ன்றோம் யாம்.

குருதேவர் அறிக்கையின் ஆசிரியர் குழு,கட்டுரையாளர்கள்,மற்ற இயக்கப் பணியாளாகள் மற்றும் நமது வெளியீடுகளை உடனுக்குடன் அச்சடித்து தரும் அச்சகத்தார் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

ஓம் திருச்சிற்றம்பலம்                அன்பு,

**ஞாலகுரு சித்தர் கருவூரர்**



பிற்காலச் சோழப்பேரரசின் முதல் மன்னன்
விசயாலனின் தாய் சித்தர் மகள் சோழியாயி

**இயக்க வெளியீடுகளின் வரிசையில்............**

# சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ. வெ. ரா.

திருச்சி மாவட்டக் கரூர் அருகிலுள்ள 'முடிகணம்' எனப்படும் முடிகண்ட சோழபுரத்தில் வாழ்ந்த அருட்பேரரசர் காக்கா வழியன் பண்ணையாடி மருதையா பிள்ளை அவர்கள் 'கரூர்ப் பெரும்புலவர்' என்ற பட்டத்துடன் கோயம்புத்தூர், சேலம், திருச்சி, தஞ்சை,மதுரை......... முதலிய மாவட்டங்களுக்கு நன்கு அறிமுக மானவர் இவர் **அரசவேடம் பூண்டு** [தமிழனத்தின் உண்மையான அரசபா ரம்பரியத்தில் தோன்றியவர்; அருளுலகில் சித்தர் காகபுசுண்டரின் வாரிசு] பாட்டுப்பாடிக்கூத்துக்களும், நாடகங்களும் **'புராண இதிகாச மறுப்பாக'** நிகழ்த்தியவர். பிருமண வெறுப்பையும் மறுப்பையும் வித்திட்டு வளர்த்தவர்.

இவரது நெடிதுயர்ந்த தோற்றமும், செம்மேனியும், இனிய குரலும், தமிழ்ப் புலமைபும், **ஆரம்பப்பள்ளி** ஆசிரியத் தொழிலும் [திண்ணைப் பள்ளிக்கூடம் தமது பண்ணையத்துக் குடிசையில் நடத்திஞர்ட], கூத்தாடும் தொழிலும், சித்த மருத்துவத் திறமையும், சோதிட ஆற்றலும், தத்துவ நூல், தர்க்க சாத்திரம், கஞ நூல், தொடுகுறி' அங்கவியல், மணியியல், வரியியல், நிமித்திகம்.........முதலிய வற்றில் இவருக்கிருந்த திறமையும்......... இவரை நாடறிந்த 'பெரும் புலவர்; 'சித்தர்; 'காக்கையர்' என்று புகழ்பெறச் செய்தன, இவர், தனது செயல் நிலை வாரிசாகச் சுவாமி கைவல்யத்தை உருவாக்கி; இருவரும் இணைந்தே பெரும்பாலும் சுற்றுப் பயணங்களில் ஈடுபட்டிட்டனர்.

சுவாமி கைவல்யத்தின் பொறுப்பிலே கரூர்ச் சந்தையிலே வெல்லம் விற்பதும்; கரூர் வட்டாரத்தில் மிளகாய், எள், பருத்தி முதலியன வாங்கி ஈரோட்டுச் சந்தையிலே விற்பதும் பெரும்புலவர் காக்கையர் மருதையா பிள்ளையின் பொழுது போக்குகளில் ஒன்று ஏனெனில், வணிகத்தாலோ, கூத்து நாடகத்தாலோ, மருத்துவத்தாலோ, பிறகலைகளாலோ, பொருளீட்டியவர் அல்ல முடிகணம் **காக்கா வழியன்** ['காக்கையர் வழியினர்' - என்பன் சுருக்கம்] பண்ணையாடி கரூர் பெரும்புலவர் மருதையா பிள்ளை.

ஈரோட்டு வணிகத் தொழிலால் வெங்கட்டநாயக்கரின் மண்டியில் வாடிக்கையாளர்களாக மாறிய மருதையா பிள்ளையும், அவரின் நண்பர் **கைவல்ய சாமியாரும்** [சுவாமி கைவல்யம்' என்றே இவர் மரியாதையுடன் அழைக்கப்பட்டார் அனை வராலும்] தங்களது வேடிக்கைப் பேச்சால் வெங்கட்ட நாயக்கரின் குடும்ப நண்பரானர்கள், ஆண்டு தோறும் **சோழியாயி கோயில்** [கரூர்ச் சோழமாதேவி, நத்தமேடு சோழியாயி, - இதுவே சோழப்பேரரசுகள் பிறப்பதற்குக் கருவாக இருந்த இடம். **இதனல் தான் அருகிலுருப்பான் சோழத்தலைநகர் கரூர்** எனப் பெயர் பெற்றது] திருவிழாவுக்கு வெங்கட்ட நாயக்கர் குடும்பத்தார் வருவதும்; நன்கொடைகள் வழங்குவதும் ஈரோட்டுக் காவிரிக்கரையையும் கரூரின் அமராவதி ஆற்றங்கரையையும் இணைத்தது.

**6-ம் பக்கம் பார்க்க**

இயக்க வெளியீடுகளின் வரிசையில்...........

அருள்மிகு வீரமாகாளி சன்னிதான

# வைகாசிப் பால்குடப் பெருவிழா அழைப்பிதழ்







வன்ம [குரோதன] ஆண்டு வைகாசி மீ 20-ந் தேதி (2-6-1985) ஞாயிறன்று பதினெண் சித்தர்களின் உண்மையான இந்துமதத்தின் சமுதாய மறுமலர்ச்சி விழாவாகப் பால்குட விழா நடைபெறுகிறது. தமிழரின் தன்மானங் காக்கும் விழா; தமிழரின் இன உரிமை பேணும் விழா; தமிழ் மொழி மீட்சி பெறும் விழா; தமிழ் நாடு வள வளர்ச்சி காணும் விழா; தமிழினம் ஒற்றுமை காணும் விழா; தமிழின உணர்வு விழிச்சி காணும் விழா; தமிழின சமய உணர்வு மலர்ச்சி பெறும் விழா; தமிழின ஒருமைப்பாடு வள வளர்ச்சி பெறும் விழா.

இம்மண்ணுலகின் பயிரினங்களும், உயிரினங்களும் மலர்ச்சியோடு செழுச்சி மிக்க வளர்ச்சி பெற வேண்டும் என்று பாடுபட்ட பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் வகுக்கப்பட்டதே இந்த வைகாசித் திங்கள் ஞானம் வழங்கும் பருவ பூசைத் திருவிழா.

கலியுகத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் மனித சமுதாய நலக் கேடுகளையும், கடுமைகளையும், கொடுமைகளையும், அநீதிகளையும் பதினெண் சித்தர்கள் படைத்த உண்மையானஇந்துமதத்தால்தான்அகற்றிடமுடியும்முடியும்,முடியும்கலியுகம்பிறந்து (சுமார் 2000 ஆண்டுகளுக்குப் பின்வந்த வேத நெறி வட ஆரியர்கள் கடைப்பிடிக்கும் 'ஹிந்து' மதத்தை இங்கு கூறவில்லை) பதினெண் சித்தர்களின் இந்துமதத் தத்துவத்தைச் செயல்படுத்துவதன் மூலமும்; அவர்கள் வகுத்த சாகாக் கல்வி முறையைப் பயிற்றுவிப்பதன் மூலமும் தான்: பகுத்தறிவு நோக்கிலும், விஞ்ஞானச் சூழலும் மனித குல மேம்பாட்டையும், பயிரின உயிரின நன்மைகளையும் நிலைநாட்ட முடியும்.

இம்மாநிலம் முழுவதையும் அருளாட்சிக்குரியதாக்கி; அரசயோகியாக, அண்ட பேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானமாக, இந்து மதத்தந்தையாக, ஞானாச்சாரியாராக, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி செயல்பட்டு நாளோலக்கத்திலும் திருவோலக்கத்திலும் அமர்ந்து அருளாட்சி புரிந்து; இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஈடு இணையற்ற தலைவராகச் செயல்பட்டு வருகின்றார் இவர் காலத்தில் தான் அருளாட்சி அமைந்தே தீரும் என்று உலக அருளாளர் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

மதுரை மாவட்டம் காரியேந்தல்பட்டி சித்தர் மாநகரில் உள்ள அருள்மிகு வீரமாகாளி சன்னிதானமே தமிழர்களின் மொழி, இன, நாடு நலங்காக்கும் அருட் கோட்ட மையமாக, குருகுலத் தேவாலயமாக நின்று செயல்படும் மாபெரும் பொறுப்பினை ஏற்றிருக்கிறது 43,73,085 ஆண்டுகளுக்கு முன்பு விண்ணுலகிலிருந்து பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்பர்களும் இம்மண்ணுலகுக்கு வந்த போது உடன் வந்த சித்தர் மகளே அண்ட பேரண்டமாளும் உலக அருளாட்சி தலைவியான ஆத்தாள் வீரமாகாளி, இவள் பதினெட்டு ஆண்டுப் பிருயத்தாளேயாயினும் அருளாட்சித் தோற்றத்தில் முப்பத்தாறாண்டுப் பிருயத் தோற்றப் பொலிவுற ஆற்றிடுபவள் (தோன்றிடுபவள்) சிங்க வாகனமுடையவள். வீரமாகாளியை வணங்கிச் சமநிலைச் சித்தி பெற்றவர்கள் 1959 பேர்களும்; 243 சத்தி பீடச் சித்தியாளர்களும்; கோடிக்கணக்கானோர் வீரமாகாளியின் பதிலியாகவும் சித்தி பெற்றுள்ளனர் இவ்வாறு ஆத்தாள் வீரமாகாளியை வணங்கிச் சித்தி பெற்றவர்கள் அனைவருமே குருதிப்பலியையும், இறைச்சியுணவுப் படையலையும், நவதானியப் புழுக்கலையுமே (சுண்டல்களை) அவிர்ப்பலியாகப் படைத்து அவைகளையே அருளுறு பூசனைப் படையலாக உண்பவர்களே!

உலகத்தில் அனைத்து வகையான மொழிகளையும் பேசக்கூடியவர்கள் வீரமாகாளியை வணங்கிச் சித்தி பெற்றுள்ளனர் என்றாலும், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வணங்கிச் சித்தி பெற்றவர்களே அதிகம்.

இந்த அருட்பெரு விழாவில் பங்கேற்பவர் அனைவரும் அருளை அநுபவப் பொருளாக அறிந்து அருட்செல்வங்களைப் பெறுவதற்காக இந்து மறுமலர்ச்சி இயக்கத்துடனும் அதன் பத்து வகையான அமைப்புக்களுடனும் தொடர்பு கொள்ளும் பொற்காலம் உருவாகட்டும்! உருவாகட்டும்! உருவாகட்டும்! அப்போது தான் கருக்களும், குருக்களும், தருக்களும், திருக்களும், தாத்தாக்களும், ஆத்தாக்களும், உலக அருளாளர்களும் மானுடரால் உணரப்பட்டு விண்ணும் மண்ணும் ஒன்றாகிடும்.

விரும்புகிறவர்கள் தங்கள் தங்கள் வசதிகேற்பப் பால்குடம், பன்னீர் குடம், மோர்க்குடம், இளநீர் குடம், பானகக் குடம், மஞ்சள்நீர்க் குடம், சந்தனக் குடம், எனும் ஏழுவகைக் குடங்களில் ஏதேனும் ஒரு குடத்தில் கருவறைப் பூசைக்குரிய நீர்ப் பொருளைக் கொண்டு வந்து அருளேற்றிப் பெற்றுக்கொண்டு தங்களின் உள்ளங்களையும், இல்லங்களையும், வழிபாட்டு நிலையங்களையும் புத்துயிர்ப்புச் செய்துகொள்ளலாம்.

அதாவது, வெங்கட்ட நாயக்கரின் 'இளைய மகன் பெயரில் 'ஈ.வெ.இராம சாமி நாயக்கர் மண்டி' என்ற வணிகநிலையம் ஈரோட்டில் புகழ்பெற ஆரம்பித்தது டன்; கரூர்ப் பெரும்புலவர் மருதையா பிள்ளையும், அவரது தத்துவத் தயாரிப்பான சுவாமி கைவல்யமும் காவிரிக்கரை ஈ.வெ,இராமசாமியை அமராவதிக் கரைக்கு வரவழைத்துச் சித்தர் நெறிச் செல்வராகத் தயாரித்தனர். பெரும்பாலும் இருவ ரில் ஒருவர் ஈரோட்டில் தங்கி ஈ.வெ.இராமசாமியைத் தயாரிக்கலானார்கள்.

ஒரு திருமணவிழாவில் ஈ.வெ,இராமசாமி உட்கார்ந்திருந்த பந்தியிலிருந்து பிருமணன் ஒருவன் எழுப்பிச் ''சூத்திரன் உட்காரக் கூடாது. அது பிருமணர்க் குரிய பந்தி வெளியே போய் உட்கார்.........'' என்று சொன்னவுடன் - அருகிலி ருந்த சுவாமி கைவல்யம் அந்தப் பிருமணனைக் கீழே தள்ளி அடியும் உதையும் கொடுத்தார் ஈ. வெ. இராமசாமி சண்டையை விலக்க வெளியே கைவல்ய சாமி யாரை அழைத்து வந்து; ''நாம், பிருமணுள் சாப்பிடற இடத்திலே உட்கார்ந்தது தான் தவறு நீங்க சாமியாரே இப்படி பிருமணனை அடிக்கலாமா? என்று கேட்டார் அப்பொழுதுதான் சுவாமிகைவல்யம்,''...இராமசாமி உன்தந்தையோ தாயோ அந்தப் பிருமணன் சொன்னதை நல்ல வேளை கேட்கவில்லை. அவன் உன்னைத் தாசிமகன், தேவடியாள் மகன், அடிமை வேலை செய்யப் பிறந்த கீழ் மகன்.........என்று திட்டினான். அது உனக்குப் புரியவில்லை. இல்லாவிட்டால் அந்தப்பிருமணன் உன்னைச் சூத்திரன் என்று சொல்லியவுடனே நீயே அவனைக் கொன்றிருப்பாய், பிச்சையெடுத்துப் பிழைக்கும் இந்தப்பிருமணன் உன்னைத் திட்டியதைக் கேட்டுக் கொண்டு சும்மாயிருந்திருந்தால் என்னை மருதையாபிள்ளை தயாரித்ததற்குப் பயனே இல்லாமல் போயிருக்கும்............'' என்று குமுறினார்.


அந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ஈ. வெ. இராமசாமிக்குப் பிருமணர் 'சூத்திரர்' என்ற சொல்லால் அனைவரையும் தாசிமகன், தேவடியாள் மகன், அடிமை............ என்பது புரிந்து பிருமணர் மேல் வெறுப்பு வளர்ந்தது, அந்த வெறுப்பைக் கரூர் அமராவதி ஆற்றங்கரையில் மருதையாபிள்ளையின் புலமையும் சுவாமி கைவல்யத்தின் தர்க்க சாத்திர அறிவும் உரமிட்டுக் களைபறித்து வளமாக வளர்த்தன. 'பிருமணரின் வேத மதத்தின் மாயைகளையும், பொய்களையும், ஆபாசங்களையும், ஏமாற்றுக்களையும், சுரண்டல்களையும் ஒழித்தால்தான் தமிழனின் மானம், மரியாதை, உரிமை, பெருமை, வாழ்வு.........முதலிய அனைத்துமே பிழைக்கும் தழைக்கும் என்ற சித்தர் நெறியின் வாரிசாக ஈவெ இராமசாமியைத் தயாரித்தவர்கள் காகபுசுண்டர் கரூர் பெரும்புலவர் மருதையாபிள்ளையும் அவர் நண்பர் சுவாமி கைவல்ய முமேயாகும். எனவே தான் பொது வாழ்விலிருந்து ஒதுங்கி வாழும் நான், 'சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ. வெ. ரா.' – என்ற பேருண்மையை விளக்கி அவரை இ. ம. இ யின் கௌரவத் தலைவராக்கப் பரிந்துரைக்கிறேன்'–





இயக்க வெளியீடுகளின் வரிசையில்............

# தந்தை பெரியார் திராவிடர் கழகம் துவங்கிய வரலாற்றின் முன்னேட்டம்



இந்து மறுமலர்ச்சி இயக்கம் தனது துணைப்படைகளில் மேலும் ஒன்றைத் தோற்றுவிக்கின்றது இக்கழகம் சமுதாய அரசியல் சிந்தனைகளைத் தோற்றுவித்து அவற்றின் நலனுக்காகப் போராடவும் மாற்றுச்சிந்தனைகளைத் தோற்றுவித்து மறுமலர்ச்சிக்கு வித்திடவும் அமைக்கப்படுகின்றது

# தந்தை பெரியார் திராவிடர் கழகம்

*[இ.ம.இயின். கிளை அமைப்பு]*

தமிழ்மொழியும், தமிழினமும், தமிழ்நாடும், தந்தைபெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் மறைவுக்குப்பின்னல் மிக வேகமாக பிறமண்ணினரான பிருமணர்களாலும், வடஆரிய வேத நெறியினர்களாலும் நசிக்கப்பட்டும், இழித்துரைக்கப்பட்டும், நலஉரிமைகளும் பெருமைகளும் அழிக்கப்பட்டும் வருகின்றன.

இந்நிலைக்கு தமிழ் இயக்கங்கள், தமிழினத்தலைவர்கள், தமிழக ஆட்சியாளர்கள் ஆக அனைவரும் உறுதுணையாகவும். காட்டிகொடுக்கும் துரோகிகளாகவும், தமிழின விரோதிகளாகவும், வாழ்ந்து வருகின்றனர். மதத்தின் பெயரால் சுரண்டல்களையும், அனைத்து வகையான ஏமாற்றுக்களையும் முதலாளித்துவப் போக்குகளையும் மடமைகளையும் மேலும் மேலும் வளர்த்து தொடர்ந்து தமிழின மக்களைப்பிரித்துச் சிதைத்து அடிமைப்படுத்தி வருகின்றனர், வடஆரியக்கூட்டமும் அவர்களின் அடிவருடிகளும் இவர்களை முழுக்க தமிழர் வாழ்க்கையிலிருந்து அகற்றிடும் பணி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவரால் துவக்கப்பட்டு இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக செயலாக்கப்பட்டு வருகின்றது.

இம் மாபெரும் முயற்சிக்கு தமிழர் தளபதி திராவிடர்கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி M.A.,B.L. அவாகள் உறுதுணையாக நில்லாமல், அவர் தன்னை, 'பிருமண எதிர்ப்பாளன் அல்ல; பிருமணீய எதிர்ப்பாளன்' என்று கூறுவதன் மூலம் பிருமணர்களை எதிர்ப்பவர்களின் ஆதரவாளனும் அல்ல! என்பதைக் காட்டிக் கொள்ளவே சித்தர்களின் பரமவைரியான பிருமணர்களின் அன்பைப் பெறும் வண்ணம் கண்மூடித்தனமாக இ. ம. இயை. விமர்சனம் செய்துள்ளார்,

எனவே இ ம. இயை விட்டால் இனி தமிழகமக்களை மீட்க நாதியில்லை! வேறு கதி இல்லை என்ற அனுதைநிலையே தமிழகத்தில் இருக்கின்றது. எனவே தமிழினத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா.வின் கனவுகளை நனவாக்குவதற்காகவும், அவர் ஆற்றியச் சமுதாயப்பணிகள் மீண்டும் உலகறியச் செய்யப்படவேண்டும் என்பதற்காகவும் தொடர்ந்து அவர் போக்கில் துணிவோடும் தெளிவோடும் செயல்படவும்

''தந்தை பெரியார் திராவிடர் கழகம்''

என்ற அமைப்புத் தோற்றுவிக்கப்படுகின்றது, ஆன்மீகவாதிகளால் தான் உலக மதங்கள் அனைத்துக்கும் தொட்டிலாக இருக்கின்ற இத்திருநாட்டை அனைத்து நலிவுகளிலிருந்தும் இழிவுகளிலிருந்தும், அழிவுகளிலிருந்தும் காப்பாற்ற முடியும என்ற சித்தர்களின் தத்துவத்தை சுவாமி கைவல்யம் ஞானியார் சுவாமிகள், சித்தர் காகபுசுண்டர்..................முதலியோர்களைப் புரிந்து கொண்ட பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நத்திகவாதத்தின் மூலமே ஆன்மீக பணியை ஆற்றினுர். அப்படி அவர் முழுக்க முழுக்க பகுத்தறிவு வாத நாத்திக வாதத்தால் செயல்படதால் தான் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அடிகளாரும் சூழ்ச்சியாக ஒழிக்கப்பட்டது போல் இவரையாரும் அழிக்க இயல வில்லை — இதை உணர்த்திடுவோம்.

தந்தை பெரியாரின் நோக்கும் போக்குமே, தமிழ்ச்சமுதாயத்தின் இன்னல் இழிவு, இடுககண், இயலாமை, இல்லாமை என்கின்ற இருள்கள் அனைத்தையும் அகற்றுகின்ற 'பகுத்தறிவுப் பகலவனுகும்' இந்தப் புதிய திராவிடர் கழகமே பெரியார் ஈ. வெ. ரா. வின் உண்மையான திராவிடர் கழகம் என்பதை மக்கள் உணருமாறு செயல்படுவோம்.

*வாரீர்!* *வாரீர்!* *வாரீர்*

---

கொடி விளக்கம்

தந்தை பெரியாரின் கனவுகள் ஏறத்தாழ பெருமளவு நனவாக்குகின்ற பணி இ ம இயின். மூலம் நிறைவேறுகின்ற காரணத்தால் செவ்வக வடிவில் பெருமளவு சிவப்பும், நடுவில் கருபபு வட்டமும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கறுப்புவட்டம் தந்தை பெரியாரின் பெயரைச சொல்லிக் கொண்டு அவரையே இருட்டடிப்பு செய்யும் ஒரு சிறியக் கூட்டத்தைக் குறிக்கும்.

**தோற்றுவாய்;**

பல்வேறு வகையான சமுதாயப்பணிகளும் பகுத்தறிவுப் பகலவன் ஈ. வெ. ரா. வின் புரட்சிகரமான கருத்துக்களையும் புதுமைத்திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு நாம் நிறை வேற்ற வேண்டியிருப்பதால், நமக்கும் தமிழினத்தலைவர் பெரியார் ஈ வெ ராவுக்கு முள்ள பிடிப்பினையும், தொடர்பினையும் நிறுவன நிர்வாக கட்டமைப்புகள் மூலம் உலகுக்கு விளக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டிருக்கிறது.

தமிழினத்தலைவர் தந்தை பெரியார் ஈ. வெ. ராவின் கொள்கைகளையும செயல் திட்டங்களையும், குறிக்கோள்களையும் தீவிரமாகச் செயலாக்க வேண்டிய அவசர அவசிய நிலைமை உருவாகியிருக்கின்றது எனவே நாம் எவ்வளவு தான் சொல்லாலும் செயலாலும் பாடு பட்டாலும் பெரியாரின் பெயரைச் சொல்லிக் கொண்டு சுகவாழ்வு வாழும் சுயநலக் கும்பலின் கொள்ளை மனமும், கோழைச் செயலும் நமக்கு முழுவெற்றி கிடைக்காமல் செய்கின்றன

அண்மையில் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் **தமிழினத் தளபதி கி. வீரமணி** MABL அவர்கள் நமது செயற்குழுவைச் சந்திக்க மறுத்தும், நம்மைப்பற்றித் தவறுனக் கருத்துக்கள் கூறியும் தமிழின நல விரோதமாகவும் செயல்பட ஆரம்பித்து உள்ளார் எனவே பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைத் தமிழினத் தந்தை, தந்தை பெரியார் ஈ. வெ ரா. அவர்களின் ஆதரவாளர்கள் அனைவரையும் நமது தலைமையின் கீழ் ஒன்று திரட்டியேயாக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மேலும் பொரியார் ஈ. வெ, ரா. அவர்கள் எந்த வொருதனி அமைப்புக்கோ' இயக்கத்துக்கோ குழுவுக்கோ கொள்கையினருக்கோ வட்டாரத்தினருக்கோ மட்டும் உரியவர் என உரிமை பாராட்டப்படுவதற்கு உரியவரல்ல. அவர் அனைத்துக்கும் அனைவருக்கும் பொது வானவர்அவரே தமிழ்ச் சமுதாயத்தின் இன்னல், இழிவு, இடுக்கண், இயலாமை, என்கின்ற இருள்கள் அனைத்தையும் அகற்றுகின்ற பகுத்தறிவுப் பகலவன். எனவே சுயநல மேகங்கள் பதவி ஆசை மேகங்கள், புகழாசை மேகங்கள்.........முதலிய பலவகை மேகங்கள் 'மூடி மறைப்பதை தடுத்தேயாக வேண்டும்.

இதற்காகவே அவசர அவசியமாக 'தந்தை பெரியார் திராவிடர் கழகம்' என்கின்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது இந்த புதிய அமைப்பே புதிய திராவிடக் கழகமே பெரியார் ஈ. வெ. ராவின் உண்மயான திராவிடர் கழகம் என்பதை மக்கள் உணருமாறு செயல்படுவோம்.



**இயக்க வெளியீடுகளின் வரிசையில்.........**

# தமிழினத் தளபதி கி. வீரமணியுடன் இணைந்து முனைந்து பணியாற்ற விரும்பி வெளியிட்ட அறிக்கை

**2?-3—85 பொன்னேரி வரும் தமிழினத் தளபதி கி. வீரமணி M.A.B.L. அவர்களுக்கு வேண்டுகோள்**

ஐயா, 11 3-85 திங்கட்கிழமை சென்னை மாநகர்த் தங்கசாலையில் நடந்த திருமண விழாவில் மாற்றார் கருத்தை கேட்க மறுத்தும்; தாமிருக்கும் மேடையில் அவை முழங்கப்படாமலும் செயல்பட்டிட்ட தங்களைக் கருத்துப்புரட்சி வாதியாகவும், மாற்றுரை மதிக்கும் உண்மையான பகுத்தறிவு வாதியாகவும் கருதினோம்,

2. தங்களின் தலைவரான பெரியார் ஈ.வெ.ரா. அவர்களையே சௌரவத் தலைவராகக் கொண்ட இந்து மறுமலர்ச்சி இயக்கச் செயற்குழு உறுப்பினர்கள் பொன்னேரியில் 23-3-1985-இல் சந்திக்க வருகிறார்கள். அன்பு கூர்ந்து, நேர மில்லையென்று தட்டிக்கழித்துத் தப்பிக்காமல் எங்களது வினாக்களுக்கு விடை தருமாறு வேண்டுகிறோம்.

3. 'குருதேவர்' என்ற மாத இதழின் பொறுப்பாளரும் ஆசிரியர் குழுவும் தங்களைச் சந்தித்து நேருக்கு நேர் விடை பெறவே [பேட்டி] வருகிறோம்; பகுத் தறிவு படையின் போர்வாளான விடுதலை ஏட்டின் ஆசிரியரான தாங்கள் அவசி யம் கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடலில் பங்கு பெற வேண்டும்.

4, தந்தை பெரியார் ஈ.வெ.ரா. '**தமிழ் மொழியின் விடுதலைதான் தமிழி னவிடுதலை,** என்ற கருத்தில்தான் **கோயில்களிலும் சமய சமுதாயச் சடங் குகளிலும் சமசுக்கிருத மொழிக்குப் பதிலாகத் தமிழ் மொழியைத்தான் பயன்படுத்தவேண்டும்**, என்று போராடி மாபெரும் வெற்றி பெற்றார். இந்த வெற்றியைப் போற்றிப் பேணிப் பாதுகாக்கத் தாங்கள் செய்து வரும் பணிகள் என்ன?

i சங்கராச்சாரியார் ''சமசுக்கிருத மொழியிலிருந்துதான் தமிழ் வந்தது'' என்றும்; இந்தியக்குடியரசின் துணைத் தலைவர் ''சமசுக்கிருத மொழி தான் இந் தியப் பண்பாட்டைப் பாதுகாக்கிறது, இம்மொழிதான் அனைத்துக்கும் மூலம்'' என்றும்; பொள்ளாச்சி மகாலிங்கம் போன்றவர்கள் ''எல்லோரும் சமசுக்கிருதம் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்றும்; கூறிச் சமசுக்கிருதத்தின் புகழ் வளர்க்கப் படுகிறது. பற்றுக்குறைக்கு இதயம் பேசுகிறது, இந்து மதம் அழைக்கிறது, விஜய தீபம், ஞானபூமி, தாய், என்ற வார மாத ஏடுகள் சமசுக்கிருதத்தின் புகழ் பாடுகின்றன.

இந்த நிலையில் தாங்கள் செய்யும் சமசுக்கிருத மறுப்புப்பணி! எதிர்ப்புப் பணி!...........என்ன? எப்படி?

5. 'பிருமணாள் சாப்பிடும் இடம்' என்ற அறிவிப்புப் பலகையை ஒரு பிருமணன் கடையிலிருந்து அகற்றிடத் தமிழினத் தலைவர் சீர்திருத்தச் செம்மல் பகுத்தறிவுப் பகலவன் தமிழரின் மானங்காத்த மாவீரர் பெரியார் ஈ.வெ.ரா. தமிழகம் முழுதுமிருந்து போராட்ட வீரர்களைத் திரட்டிக் கொணர்ந்து உலகறி நெடிய பெரிய போராட்டத்தை நிகழ்த்தினார். அவரின் வாரிசாக உள்ள தாங்கள் 'பிருமணிய எதிர்ப்பாளராக' மாறியிருப்பதாகக் கேள்விப்பட்டோம்! இது உண் மையா? தங்களின் பிருமண வெறுப்பும், மறுப்பும், எதிர்ப்பும் இதுவரை எப்படி யெப்படிச் செயல் பட்டிருக்கின்றன?

6, சிறைக்கஞ்சாச் சிங்கம்! வெண்தாடி வேந்தர்' ஈரோடு தந்த பகுத் தறிவுப் பாசறை! நாவை அசைத்தால் நாடே அசையுமாறு வாழ்ந்த திராவிட இனத்தின் தலைவர்! சுயமரியாதை இயக்கம் கண்ட உரிமைப் போரின் நாயகர், தமிழினக் காவலர், தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வின் கனவுகளை நனவாக்கப் பாடுபடும் தமிழினத் தலைவர்களுக்கும், குழுக்களுக்கும், இயக்கங்களுக்கும் தாங்கள் வழங்கி வந்துள்ள ஆதரவு என்ன? தமிழர் மானங்காக்கப் பெரியாரின் படையைப் பயன்படுத்தும் முறைகள் என்ன?

7. சாதி மத ஏற்றத் தாழ்வுகளையும் வெறிகளையும் முறியடிக்கத் தாங்கள் ஆற்றிவரும் பணிகள் என்ன?

8. பிறரைக் கண்மூடித் தனமாகத் திட்டுவதுதான் தங்களின் திட்டமா? அல்லது தீயனவற்றை அகற்றத் தெளிவான திட்டங்கள் இருக்கின்றனவா?

9. பெரியாரின் பெயரால் தாங்கள் செய்துவருபவை பெரியாரின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் வலியுறுத்துகின்றனவா? அல்லது நலிவுறுத்துகின்றனவா? வளவளர்ச்சியடையச் செய்கின்றனவா? அல்லது தளர்ச்சியடைச் செய்கின்றனவா?

10. தந்தை பெரியார் உயிரோடு இருக்கும் வரை உண்மையிலேயே வீரமும்தீரமும் மிக்க தளபதியாக இருந்த பகுத்தறிவுச் சிங்கம் தோழர் கி. வீரமணி அவர்கள் இப்பொழுது கோழையாக மாறிவிட்டிருப்பது எப்படி? ஏன்? எவ்வாறு? எதற்காக? என்று **கண்டறிய** விழைகின்றோம்.

11 தங்களுக்கு, பலநூறுயிரக் கணக்கான வீரதீர மிக்க தொண்டர்களையுடைய உலகப் பேரியக்கமான இந்து மறுமலர்ச்சி இயக்கம் முழுஆதரவும், உதவியும் பாதுகாப்பும் வழங்குகிறது, என்ற பேருண்மையைப் புரிய வைக்க விரும்புகின்றோம்.

12. தமிழினத் தளபதியாரே! தந்தைபெரியாரைப் போல் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் வழங்குவீர்கள் என்று நம்பியே எங்களின் சந்திப்பின் நோக்கம் பற்றிய சில வினாக்களை அச்சிட்டு வழங்கியுள்ளோம். நாம் சந்திப்போம்! சிந்திப்போம்! தமிழினஉரிமையும் பெருமையும் காக்க ஒற்றுமைப் பட்டு உழைக்கக்கூடிய புதிய சத்தியை உருவாக்குவோம்.

**13. பிறமண்ணினரான பிருமணரை முழுமையாக, தமிழர்கள் வாழ்விலிருந்து அகற்றிடும் முறையானத் திட்டங்களை நங்கள் வைத்துள்ளோம். ஏற்றுச் செயல்படுத்திட தாங்கள் முன்வருவீர்களா? அல்லது தங்கள் செய்கியோடு. மேடைகளில் 'சித்தர்கள் கருத்து இவைகள்' என்று அறிவித்து தமிழினத்தை உண்மையிலேயே மீட்க முனைவீர்களா?**

14. 11—3—85 சென்னை திருமணத்தில் தாங்கள் வாரஇதழ்ச் செய்தியேட்டில் [இதயம் பேசுகிறது] நெல் உற்பத்தியில் தமிழ் நாடு தன்னிறைவு கண்டுள்ளதை விமர்சித்துப் பேசிய தாங்கள் அதே ஏட்டில் தமிழ்மொழி சமசுக்கிருதத்திலிருந்துதான் வந்தது என்று வெளியிட்டிருந்தது பற்றி ஏன் கண்டிக்க வில்லை?

15, பிப்ரவரி மாத **விஜயதீபம்** மாத இதழில் சாதிகள் அடிப்படையில் சமுதாயம் அமைய வேண்டும். சாதிகள் இல்லையேல் கட்டுக் கோப்பு, மரபு, உரிமை அழிந்து விடும் என்று வெளியிட்டிருந்தார்களே? அரசியல் சட்டம் **சாதிகளைத் தடைசெய்யவேண்டும்** என்று கூறியிருந்தபோதும் ஏன் கண்டிக்க வில்லை? இவைகள் தாங்கள் தமிழினத்தின் மீது வைத்திருக்கும் போலித்தன்மையைக் காட்டவில்லையா?

16. தங்களின் மூலம்தான் தமிழகத்துக்கு உள்ள பல சிக்கல்களையும். சீரழிவுகளையும், பழிநிலைகளையும் இழிநிலைகளையும் தீர்க்க வேண்டும். எனவே எதையும் எப்போதும் எப்படியும் செய்யக் கூடிய அறிவும், ஆற்றலும் உடையவர்களே. நாங்கள் இதற்கேற்ப பெரியாரின் தொண்டர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் வாருங்கள்! வாருங்கள்!!

**பெரியார் ஈ, வெ ரா. வின் குறிக்கோள் வெல்க!**

**பெரியார் ஈ. வெ. ரா. வின் கொள்கை வாழ்க!**


**தமிழ் வாழ்க! தமிழினம் உரிமை பெறுக!**

இயக்க வெளியீடுகளின் வரிசையில்............

# தமிழின அருட்கவிஞர் வள்ளலாரை ஏற்றுப் போற்றும் முகமாக தைப்பூச விழாவில் வெளியிட்ட அறிக்கை

**அருட்பெருஞ்சோதிகளே! கருணையாளர்களே!!**

**விடை கூறுங்கள்! அன்றேல்அணி திரளுங்கள்!!**



*காதல் மோகினி — மாத இதழ் ஆசிரியன் பி. சி. கணேசனின் பிதற்றல்கள்*[1]

*தமிழின அருட்செல்வர் இராமலிங்க அடிகளாரை கைக்கூலிப் பெற்றுக் கொண்டு தான் தோன்றித் தனமாக இழித்தும் பழித்தும் கேவலப்படுத்தியிருக்கும் கருங்காலிச் செயல்.*

அருட்பெருஞ் சோதியை வழிபடுவோர்கள் உள்ளமெல்லாம் இருண்டு விட்டாதா? கருணை மறவர் இராமலிங்க அடிகளாரின் தொண்டர்கள் கோழைக ளா? மோழைகளா?

**தன்மானத் தமிழ் இளைஞர்களின் இன மானம் காக்கும் முயற்சிக் குமுறல்!**

-'காதல் மோகினி'- மாத இதழ் 1985- சனவரி இதழ், கட்டுரை- **பெண்மை தரும் பேரின்பம்**' (பக்கம் 30-33) என்ற பகுதியில்......... பி. சி. கணேசன் பின் வருமாறு பிதற்றியுள்ளான்

''.........அவர் (இராமலிங்க அடிகளார்) நினைத்ததைத் தெளிவாகப் பிறருக்குச் சொல்லத் தெரியவில்லை, சொல்லத் தெரியவில்லை என்ருல் அவருக்கு மனம் தெளிவில்லை மனம் தெளிவில்லை யென்ருல் அறிவுத் தெளிவில்லை என்றும் அறிவுத் தெளிவில்லையென்ருல் மூளை சரியில்லை என்றும் மூளை சரியில்லை என்ருல் அத்தகையவருக்கு ஆண்மையிலும் குறைவுண்டு............''

''......ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் பெரிதும் புகழ்ந்து பாராட்டுவதோடு உயர்ந்த ஜாதிக்காரர்களுக்கு எத்தனையோ மதத் தலைவர்கள் இருப்பதைப் போல் மற்றசாதியாருக்கும் மதத்தலைவர்கள் இல்லையே என்ற ஏக்கத்தால் 'வள்ளலாரை விட அன்புள்ளம் கொண்டவர்கள் எவருமே இல்லை' என்பதைப் போல பேசிப் பேசிப் பிரச்சாரம் செய்கிருர்கள்.........''

''.....அவருக்கு, அவர் மனைவியின் நடத்தை மீது சந்தேகம், அவள் வீட்டில் குடியிருந்த தையல்காரர் ஒருவனுடன் திருமணத்திற்கு முன் அவரது மனைவி தொடர்பு கொண்டிருந்தாள் என்ற சந்தேகத்தால் அவளை முதலிரவிலேயே தீண்டா மல் விட்டு விட்டுத் துறவியாகி விட்டார்.........''

''......இவரைப் பற்றி புகழ்ந்து பேசும் சிலம்புச்செல்வரும் மற்றையோரும் அவர் மரணமில்லாப் பெருவாழ்வையடைந்தார் என்று பாராட்டிப் பேசுகிருர்கள் அவர் வாழ்க்கையின் முடிவில் சித்திவளாக மாளிகையில் கதவைத் தாளிட்டுக் கொண்டு ஜோதியாக மறைந்தார் என்று சொல்கிருர்கள்? இவர் ரசக்கற்பூரத்தை சாப்பிட்டு தம்முடலைத் தாமாகவே அழித்துக் கொண்டார் என்று கூட சொல்பவர் களுண்டு ........''

''......அவர் விதவைகள் அணிவதுபோல் வெள்ளையாடையைக் கொண்டு உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு முட்டாக்கும் அணிந்திருப்பதை........ பெண்கள் அணியும் ஆடைகளை ஆண் அணிவதை தன் இன கவர்ச்சியுடையவர்கள் Homo Sexuals மட்டுமே அணிவார்கள் .....''

- மேற்கண்டவாறு வள்ளல் பெருமானை இழித்தும் பழித்தும் வெளியிட்டுள்ளார்கள்

- இதற்கு அருட்பிரகாசத் திருச்சபையினர் என்ன பதில் சொல்கின்றனர்?

- தமிழினத்திற்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் கடைசிவரைப் போராடிய தந்தைப் பெரியார் ஈ. வெ. ரா. வின் சீடர் என்று பிதற்றும் பி. சி. கணேசன் தன்மானத்தோடுதான் எழுதினுன?

- இராமலிங்க அடிகளாரை 'மூளை இல்லை யென்றும், ஆண்மைக் குறையுள்ள வரென்றும்' குறிப்பிடுகின்ருரே! இதுதான் உண்மையா? அல்லது ஆராய்ச்சி என்பது அலித்தன்மையைக் கண்டுபிடிப்பதா?

❋ பலவாயிரம் அருட்பாக்களைப்பாடிய வள்ளலாரின் கருத்துக்களை ஆராய்வது ஆராய்ச்சியா? அல்லது முதலிரவில் என்ன செய்தார்? என்பது ஆராய்ச்சியா?

❋ தமிழன் அருளாளராகப் பிறந்து விட்டான்! என்ற பொருமையா? எரிச்சலா? தன்மான மற்றந் தன்மையா?

❋ உங்கள் சாதிகளில் மதத் தலைவன் இல்லையென்பதால்தான் வள்ளலாரை தலை வணக்கிக் கொண்டீர்களா? அப்படியென்றால் வள்ளலார் பாடியது திருவருட்பாதான் என்ற நீதி மன்றத்தின் தீர்ப்பு என்னவாயிற்று?

❋ மண், பெண், பொன் துறந்து வாழ்வதுதான் ஞான சித்தர்களின் நெறி! ஞான சித்தரான வள்ளலாரின் வாழ்க்கையை உணராத அற்பன் அவரை சந்தேகப் பிராணி–என்று கேவலமாக எழுதியுள்ளானே! இதே காரணத்தில்தான் இராம கிருட்டிண பரமஅம்சர் தன் மனைவியான சாரதா தேவியாரை ஒதுக்கி வைத்தாரா! வள்ளலார் ஒரு தமிழன் என்பதாலா? தமிழனுக்கு நாதி இல்லை என்பதாலா?

❋ அருட் பிரகாசராக வள்ளலார் மறைந்தது பொய் கற்பனை – என்று கூறுகின்ற கூற்றுக்கு என்ன பதில் கூறப் போகின்றீர்கள்? ஆங்கிலேயர்களும், மற்றைய ஆராய்ச் சியாளர்களும் ஒப்புக் கொண்ட உண்மையின் முடிவு என்னவாயிற்று?

❋ வெள்ளையாடை உடுத்தலும், முட்டாக்குப் போடுவதும் Homo Sexual (சுய இன்பம் காண்கின்றவர்) என்றால் சங்கராச்சாரியார்களும் ஆதீனங்களும். பீடாதிபதி களும், கிறித்துவப் பாதிரிமார்களும், இசுலாமியப் பெரியோர்களும் சுய இன்பம் காணும் அலிகளா? பேடிகளா?

❋ ஆறு திருமுறைகளைப் பாடி உலகம் உள்ளளவும் மதிக்கும் வண்ணம் பொற்சபை -சிற்சபை மற்றும் அருள் நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டி மறைந்த 'ஞானசித்தரான' அடிகளாரைப் பற்றி தரக்குறைவாகக் கூறப்பட்டுள்ள கூற்றுக்கு என்னபதில் கூறப் போகின்றீர்கள்?

❋ மௌனம்தான் பதிலென்றால் எழுதி வயிறு பிழைக்கும் கைக் கூலியான இவனை வாழவைப்பதுதான் உங்களது முடிவா?

❋ அமெரிக்காவில் வள்ளல் பெருமானுக்கு வளாகம் கட்டும் சபையினரே - இந்து மத இளைஞர்கள் கேட்கின்ற இந்த கேள்விகளுக்கு என்ன பதில்?

❋ மேற்கண்டவைகள் உண்மை யென்றால் இவ்வரிய உண்மைகளும் திருவருட் பாவில் சேர்த்து சிறப்புரையாக எழுதப்படுமா?

❋ வழக்கம் போல் தமிழர்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதால் அனைத்துத் தலைவர்களுக்கும் கடிதம் எழுதிவிட்டு தைப் பூசத் திருவிழாவில் கூடும் இராமலிங்கப் பத்தர்களுக்கு அச்சிட்டு அறிக்கையாக வழங்குகின்றோம்

❋ இதற்குப்பிறகும் திருச்சபையினர் நேரடியாக பி.சி.கணேசனை கண்டிக்க வில்லையென்றால் இந்து மறுமலர்ச்சி இயக்கமே 'தமிழ்மொழி, இன, நாட்டு மறுமலர் சிக்கு பாடுபடுவதே' இதன் கொள்கை என்பதால்;தமிழின அருளாளர் 'இராமலிங்க அடிகளாரைப் பாதுகாக்க நேரடியானப் போராட்டத்தில் ஈடுபடும்

❋ அன்றுவது, உண்மையை உணர்ந்து காலந்தோறும் இந்து மதத்தின் மீது வாரியிறைக்கப்பட்டு வரும் களங்கத்தைத் துடைக்கப் பாடுபட்டுவரும் 'இந்து மதத் தந்தை குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்' அவர்க ளின் தலைமையை ஏற்று அருளுலக இருளகற்றும் பணி முழுமை பெற ஒத்துழைப்புக் களை நல்குங்கள்!

**தமிழ் மொழி, இன மானங்காக்க வாரீர்! வாரீர்!! வாரீர்!!!**

—இந்து மறுமலர்ச்சி இயக்க இளைஞர் அணி

# இயக்கத்தின் மறுமலர்ச்சிப் பணி

[குருதேவர் மாத அறிக்கையில் தொடராக வெளிவந்த 'உண்மையான இந்து மத உயர்ச்சிக்காக வட ஆரிய வேத நெறிக்குக் கண்டிப்பு' என்ற கட்டுரையிலிருந்து சில வாசகங்கள்]

''......துறவியானவன் தனக்கு மட்டுமே நன்மை செய்து கொள்பவன் என்பதால் இவன் கையால் திருநீறு, குங்குமம்...... முதலியவைகளைப் பெறவே கூடாது இல்லறம் ஏற்காது இளமையிலேயே! துறவியாகிறவர்களைப் பார்ப்பதும் பெரும் பாவமாகும் இவர்களை வழிபாட்டு நிலையங்களிலும் வழிபாடுகளிலும் ஒதுக்கியும் விலக்கியும் கடைநிலையில் வைத்திருந்தால்தான் கோயில்கள் பாழ்படா! அருட்பணிகள் குன்றிடமாட்டா!......என்று பதினெண் சித்தர்கள் மிக மிகத் தெளிவாகக் குறிக்கின்றார்கள்.

''......காயந்திரி மந்தரம் அனைவரும் ஓதலாம் என்பதே சித்தர்கள் வகுத்த நெறி! ஆனால் வடஆரிய வேத நெறியினர் ஆண்கள் மட்டுமே கூறவேண்டும் என்று தவறாகக் கூறுகிறார்கள் 'ஆண், பெண் இருவரும் சமம்! பெண்ணே சத்தி! பெண்ணே தெய்வம்..... என்றெல்லாம் முற்போக்குக் கொள்கை கொண்ட இந்து மதத்தினரை கேவலப்படுத்தும் முறையிலும் பெண்களை அடிமைப் படுத்தும் முறையிலும் இக்கூற்றைக் பார்ப்பனர்கள் கூறி வருகின்றார்கள்.........''

'' ... காயந்தரி மந்தரத்துக்கென்று யாகம் செய்வதென்பது பெரிய ஏமாற்று வேலையே! இருந்தும் வட ஆரியர்கள் கற்பனையானப் போக்கில் மிதமிஞ்சிய அறிவற்ற போக்கில் தனிமனித மந்தரங்களை யாகத்தில் பயன்படுத்தி வருகின்றனர். இது மிகவும் விந்தைக்கும்' வியப்புக்கும், வேதனைக்கும்; ஏமாற்றத்துக்கும் உரியனவாக உள்ளதோடு; அவர்களின் அருளுலக அறியாமையையும், பூசை நெறிகளில் அரைகுறை வேக்காட்டுத் தன்மையையும் வெட்ட வெளிச்சமாக்குகின்றது.

''......இப்படிப்பட்ட குருட்டுத்தனத்தால்தான் இந்துமதம் கேலிக்கும், கிண்டலுக்கும், மறுப்புக்கும், வெறுப்புக்கும், ஏளனத்துக்கும், நகைச்சுவைக்கும் உள்ளாகி நலிந்தும் மெலிந்தும் வருகின்றது. இப்போக்கினை வளர்த்துவரும் வட ஆரிய வேத நெறியினரை இக்கட்டுரையின் வாயிலாகக் கடுமையாகக் கண்டிக்கின்றது இ. ம. இயக்கம். திருந்துவதற்கும், திருத்துவதற்கும் வாய்ப்பினை நல்குகின்றது......''

''.........இவர்களைத் திருத்திட ஒரே வழி பதினெண் சித்தர்கள் படைத்துச் சென்றுள்ள இந்து மதக் கலைகளையும் அறிவியல்களையும் சாதி, இன பாகுபாடின்றி அனைவருக்கும் கற்றுத் தந்து அருளை அநுபவப் பொருளாக்கிடல் வேண்டும்.







**இயக்க வெளியீடுகளின் வரிசையில்............**

# தீவாளித் [தீபாவளி] திருநாள்

## [உண்மையான தீவாளித் திருநாள் கொண்டாடும் முறை]

## பதினெண் சித்தர்கள் வழங்கிய இந்தியத் திருநாள்

**தீவாளி - விளக்கம்**

*தீ ஆவளி சித்தர்கள் உருவாக்கிய திருநாள். கார்த்திகைக்கு அகல் விளக்குகளை வழிபாடு செய்வது போல்; தீ ஆவளிக்கு குத்துவிளக்கு ஏற்றியும், தீ வளர்த்தும் [ஐந்தீ] ஒளியை வழிபடுவதுதான் தீ ஆவளித் திருநாள் இந்த ஒளி வணக்கமே இம் மண்ணுலகை அண்டபேரண்டங்களோடு இணைக்கிறது.*





**தீவாளி - வரலாறு :-**

*தீஆவளி எனும் திருநாள் அனாதிக்காலம் தொட்டு நிகழ்ந்து வருகிறது; பாரத காலத்தில் **நரகாசூரன்** தீஆவளி அன்று போரிட்டுக்கொல்லப்பட்ட நிகழ்ச்சி ஏதேச்சையாக நடந்ததால்; பின்னர் அது வரலாற்று நிகழ்ச்சியாகவும் அதனாலேயே தீஆவளித் திருநாள் தோன்றியது என்ற தவறான கருத்து உருவாக்கப்பட்டு விட்டது. எனவே தீஆவளி திருநாளுக்கும் நரகாசுரன் மடிவுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. இதே போல், இன்றுள்ள சமண மதத்தைத் தோற்றுவித்த 27-வது தீர்த்தங்கரான **மகாவீரர்** நிர்வாண முத்தி நிலையை அடைந்தது இதே தீஆவளி நன்நாளில்தான்; இதன்படி சமணர்கள் [சைனர்கள் = அருக சமயத்தவர்] தங்களுடைய மத குருவான மகாவீரர் நிறைவு பெற்றதை ஒட்டிய நாளான இந்நாளை தங்கள் தலைவரால்தான் தோன்றியது எனக்கூறி வருகிறார்கள் இதுவும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியே! ''முருகன் தேவசேனாதிபதியாகப் பொறுப் பேற்றதும்; சிவபெருமான் திரிபுரம் எரித்ததும்; இறையனார் இம்மண்ணுலகை அருளாட்சிக்குரியதாக ஏற்றதும்; பதினெண் சித்தர்கள் இம்மண்ணுலகிற்கு வந்ததும்; இந்துமதத்தை வழங்க ஆரம்பித்ததும் முதல்கருவறையை அமைத்ததும் இத்தீஆவளி நன்நாளில்தான் என குருபாரம்பரியம் மிகத்தெளிவாக பாராட்டிக் குறிக்கிறது. எனவே தீஆவளி தமிழர் திருநாள்; மனித நாகரீகமும் பண்பாடும்-மனிசன் மனிதனாக மாறிய பொன்நாள்'' .........அனாதிக்கால கருவூரார் குருபாரம்பரிய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.*

**தீவாளி - கொண்டாடும் முறை :-**

'தீஆவளி' பற்றிக் குறிக்கும் குருபாரம்பரிய வாசகங்கள் இன்றைய தமிழகத்தைக்காக்கும் ஒருவலிமை மிகும் சாதனம் ஆகும் 'தமிழர்கள் தீவாளித் திருநாள் தங்களுடைய திருநாள்தான்' என்ற பேருண்மையை உணர்ந்தும், நம்பியும் செயல்பட்டால்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சியையும் தமிழினத்தின் உரிமையையும் பேணமுடியும். இதற்காகத் தீவாளி எப்படிக் கொண்டாடப்பட வேண்டுமென்பதை விளக்குகிறோம்.

**பதினெண் சித்தர்கள் தமிழ்மொழியின் ஒலி அலைகளின் மூலம் தனி மனிதர்கள் தங்களுடைய முன்னோர்களில் பிறப்பெடுக்காமல் அலைபவர்களின் ஆவி. ஆன்மா, உயிர் எனும் மூன்றையும் ஆண்டுக்கு ஒருமுறை தீவாளி அமாவாசை அன்று எண்ணெ நீராடிப் புத்தாடை அணிந்து அவரவர் வசதிப்படி புறா, கோழி, ஆடு, மீன்......பலியிட்டு; அழைத்து விருந்திட்டு மகிழும் திருநாளாகவே தீவாளித் திருநாளைப் படைத்தார்கள்.**

**(க) கொடிநிலை வழிபாடு**

அமாவாசையின் அதிகாலையில் குடும்பத்தலைவர்கள் எண்ணெ நீராடி, புத்தாடையணிந்து தீ + ஆவளி -> அகல் விளக்குகளை விண்வெளியின் மீன் (விண்மீன்) கூட்டத்தோற்றமாக வீட்டின் உள்ளும் புறமும் ஏற்றிடல் வேண்டும். வாசலில் புது மணல்பரப்பித் குண்டம் அமைத்து நெருப்பு வளர்த்துப் பலிகொடுத்து மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றி அவ்வக்காலப் பதினெண் சித்தர் பீடாதிபதிளால் வழங்கப்படும் பூசா மொழி வாசகங்களைக் கூறிக் 'கொடி நிலை வழிபாடு' என்பதனை நிறைவேற்ற வேண்டும் இதில் விண்மீன்கள், கோள்கள், இராசிகள், பிண்ட அண்ட பேரண்ட அண்டபேரண்டத்தவர்கள். இம்மண்ணுலக உருவ, அருவ, அருவுருவங்கள்........... *முதலிய அனைவரும் வழிபடப்படுகிறார்கள், அமாவாசை நாளில் மேற்குறித்த அனைவரும் அழைப்பை ஏற்றுவருவர் அமாவாசை விரதத்தின் பெயரால் மரக்கறி உணவுதான் படைத்தல், உண்ணல்...... என்ற பழக்கம் பிற்காலத்திய பழக்கம். அமாவாசையில் இறைச்சியுணவு (புலால், மாமிசம்) படைக்கப்பட்டேயாக வேண்டும்.*

*குறிப்பு: தீவாளி அல்லாத மற்ற அமாவாசைகளில் குறிப்பிட்டத் தனிமனிதருக்காகப் பூசை செய்தால் இறந்துபோன அந்த மனிதன் எந்தஉணவை விரும்பி உண்பாரோ (மரக்கறி உணவு அல்லது இறைச்சி) அந்த உணவைத்தான் படையலாகப் போட்டு வழிபடவேண்டும். அப்படியல்லாமல் அமாவாசைப் பூசையென்றால் இறைச்சி உணவே கூடாது என்று மறுத்து மரக்கறி உணவையே படைப்பது தவறு! தவறு!! தவறு!!!*

**(உ) கந்தழி வழிபாடு**

கந்தழிவழிபாடு-அதாவது சூரியனை வழிபடல். பகலில் உருமவேளை அல்லது உச்சிவேளை எனப்படும் கலசப் பூசைக்குரிய (தாந்திரீக ஏந்திரீக மாந்திரீகப் பூசைகளுக்கும் உரிய) 11 முதல் 1-30 வரை =2-30 மணி நேரம் = 1 சாமம் வீட்டில் செய்த பலகாரங்கள், காலையில் பலிகொடுத்ததைச் சமைத்த உணவு, பூசைக்குரிய பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பூ, புகை (சாம்பிராணி ஊதுபத்தி), கற்பூரம்......... முதலியவைகளை யெல்லாம் வைத்து கந்தழி எனப்படும் சூரிய வழிபாட்டைச் செய்ய வேண்டும்.

## (ங) வள்ளி வழிபாடு

*மாலையில் வள்ளி வழிபாடு(வள்ளி நிலை வழிபாடு) வீட்டின் முற்றத்தில் அல்லது நடுவீட்டில் அல்லது பூசையறையில் ஐந்து(5) திரியிட்ட குத்துவிளக்கை ஏற்ற வேண்டும்' அதற்கு நேராகச் சுவற்றில் நிலவைப் போல் வட்டமாக அவரவர் விருப்பப்படி விருப்பமான அளவில் சந்தனத்தாலோ அல்லது மஞ்சளாலோ பூசி மெழுகவேண்டும். அதில் திருநீற்றாலும் குங்குமத்தாலும் பட்டைகளும் பொட்டுக்களும் 3முதல் 48 வரை வைத்து அலங்கரிக்க வேண்டும். ஒரு மண் கலயத்தில் மஞ்சள்நீர் நிரப்பி 1. மாவிலை 2. வேப்பிலை 3. அரசஇலை 4. ஆலிலை 5. வில்வஇலை 6. தென்னைக் குருத்தோலை 7. பனைக் குருத்தோலை 8. துளசி இலை 9. அருகம்புல் முதலியவைகளை வைத்து நடுவில் தேங்காய்வைத்து நூல் சுற்றி கலசம் தயாரித்து வைக்கவேண்டும். வசதி வாய்ப்புகளுக்கேற்ப எல்லோரும் புத்தாடை அணிந்து பால், பழங்கள், வெண் பொங்கல், சர்க்கரைப்பொங்கல், பால் பொங்கல், பலகாரங்கள்......முதலியவைகளைப் படைத்து நிலவை (திங்கள்) வழிபடவேண்டும்*

*வசதி வாய்ப்புக்களுக்கேற்ப அவரவர் வீட்டு வாசலிலோ, தெருமுனையிலோ, கோயில்களின் வாசல்களிலோ ஒன்று முதல் ஒன்பது சொக்கபபானைகள் (வைக்கோல், சோளத்தட்டை, ஓலைகள் விறகுகள் முதலியவைகளால் கோபுரம் போல் கட்டி நிறுத்தப்படுபவை) நிறுத்திடல் வேண்டும். அவரவர் வீட்டில் நிலவுப்பூசை குத்து விளக்கின் முன் செய்து முடித்த பிறகு வீட்டினுள் ஏற்றிய கற்பூரத்தை அல்லது குத்துவிளக்கு (நெருப்பை) தீயை பயன்படுத்தித்தான் சொக்கப்பானை எரிக்கவேண்டும் இந்த சொக்கப்பானையின் சாம்பலை அவரவரின் வீடு, நிலம், காடு, தோட்டம், வயல் முதலிய எல்லா இடங்களிலும் தூவிவிடுவதால் எல்லாவகையானத் தீமைகளும் தடுக்கப்பட்டும் அகற்றப்பட்டும் தேவையான நன்மைகள் விளைந்திடும்.*

*எனவே தமிழர்கள் அனைவரும் இம்மண்ணுலகுக்குரிய கொடி நிலைவழிபாடு கந்தழி நிலை வழிபாடு வள்ளி நிலை வழிபாடு எனும் முப்பெரும்வழிபாட்டினையும்தீவாளியைமுன்னிட்ட அமாவாசைநாளில் கொண்டாடி எல்லாவித நன்மைகளையும் அடையவேண்டும். இதன் மூலம் தமிழர்கள். பதினெண் சித்தர்கள் வழங்கிய இந்து மதப்படி வாழ்ந்து மொழிப்பற்று, இன ஒற்றுமை, நாட்டு உரிமை பண்பாட்டுபிடிப்புமுதலியவற்றில்விழிப்போடும்செழிப்போடும்என்றென்றும் வாழ்ந்திடுவார்கள்.... என்றபத்தாவது பதினெண்சித்தர்பீடாதிபதி அமராவதிஆற்றங்கரைககருவூரின குருபாரம்பரிய வாசகங்களைப் பற்றி கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை குறிக்கிறார்.*

கி மு 100 க்கும் கி மு. 150 க்கும் இடைப்பட்ட காலத்தில் வட ஆரியர் தமிழினத்தைப் பல்வேறு போர் முறைகளால், உள்நாட்டுப் பூசலகளால். பிரிவினைகளால், சூழ்ச்சிமிகு சண்டைச் சச்சரவுகளால்...........மிகப் பெரிய அழிவையும். வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் அடையுமாறு செய்தனர் அப்பாவித் தமிழினம் கரடிப்போர் முறையால் கதிகலங்கிக் கருத்தழிந்து சிதறிச் சீரழிவுற்றது. அந்த அவலக்கோலங்களையும் வட ஆரிய மாய வலைகளையும் அகற்றப் பல நூற்றாண்டுகள் தமிழினத் தலைவர்கள் பகுத்தறிவேடும், தன்னலமின்றியும். அற்ப ஆசைகளுக்கு அடிமையாகாமலும்........போரிட வேண்டுமென்று உணர்ந்தும் உணர்த்தியும் தமிழிலககியங்களைத் தொகுத்தார்; எண்ணற்ற இலக்கியங்களை எழுதியும் எழுதுவித்தும் செயல்பட்டார்; மூன்று பெரும் சக்திகளான 1. குருபாரம்பரியம், 2. அரசபாரம்பரியம் 3. இலக்கிய பாரம்பரியம் எனும் சித்தர்களின் முக்கோணக் கோட்டையை வலிமைப்படுத்தினர் .......பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி.

இன்றைக்கு தமிழர்களிடையே தீவாளியைக் கொண்டாடுவதைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுவதால் இ. ம இ யின் இன்றைய ஈடு இணையற்ற தலைவரும் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதி பதியும் ஆகிய இந்துமதத் தந்தை குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் தமிழக மக்களுக்கு தீவாளி பற்றிய இக் குருபாரம்பரிய வாசகத்தை அருளுகின்றார்.

குருதேவரிடம் விளக்கம் கேட்டு இக்கட்டுரையினை எழுதியவர்கள் ''குருதேவர்'' மாத ஏட்டின் ஆசிரியர்க்குழுவினர்.

# 64-வது நாயனர் பெரியார் ஈ. வெ. ரா.

**வேம்படிதாளம் சீ. மணி**

*[அருள்மிகு கபாலீசுவரியம்மன் சன்னிதானம்]*

தமிழர்களுக்காக தமிழ்மொழி, இனம், நாட்டிற்காக பலகிளைகள் [இயக்கங்கள், சங்கங்கள், குழுக்கள்.........] தோன்றி உழைத்தாலும் பாராட்டத்தக்கதே! அப்பொழுதுதான் தமிழ்ப்பற்றிய சிறப்புக்கள் உலகுக்கு வெளிப்படும். அப்படி வெளிப்படும் போதுதான்அந்ததமிழ்முதன்முதலில்யாரால்?எங்கு?எப்பொழுது?எதனுல்?ஏன்உருவாக்கப்பட்டது? அதன் பூர்வீகம் என்ன? அதன் நோக்கம் என்ன? அது இதுகாறும் மனித இனத்திற்கு எவ்வாறு தொண்டாற்றிக் கொண்டு வந்திருக்கிறது? வருகின்றது? வரப்போகின்றது? என அவற்றை ஆராய முற்படும்போதுதான் உண்மையான பதினெண் சித்தர்களால் தமிழில் உருவாக்கப் பட்ட இந்துமதம் பற்றியத் தனித்தன்மை மற்றும் சிறப்பும் உலகு அறியும்.

ஆரியர்களால் உருவாக்கப்பட்ட ஹிந்து மதத்தைத்தான் தமிழினத் தலைவர், தன்மானத் தொண்டர் அருள்மிகு 64வது நாயனர் சொல்லடிநாயனர் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் வன்மையாகக் கண்டித்தார். துணிச்சலாக எதிர்த்தார் ஆபாச வார்த்தைகளால் தூற்றினுர் அதனுல்தான் தமிழினத்திற்கு விடுதலைக் கிடைத்தது. அவர் அப்படி எதிர்த்ததால் தான் ஆரியரால் போதிக்கப்பட்ட மாயா ஹிந்து மதத்தால் மயங்கி, சொக்கி.........இருந்த பலரில் சிலர்தான் விழித்தெழுந்தனர் அவர்கள் தமிழினத்திற்காகப் பாடுபடுகிருர்கள்.

தந்தை பெரியார் அவர்கள் இருந்த காலத்தில் இருந்த மதமறுப்பு, எதிர்ப்புக் கொள்கை இப்பொழுது எங்கே? எதனுல் இந்த அவலநிலை? அவரால் உருவாக்கப் பட்ட தொண்டர்கள் என்ன செய்கிருர்கள்? அவருடைய தொண்டர்களில் ஒருவர் கூடவா அவரைப் போல் அறிவிப்புக்கள் செய்யஇயலவில்லை? முடியவில்லை? இதைப் பற்றி ஆராயும் போது தான் தந்தைப் பெரியாரைப் புரிந்தவர்கள் கிடைப்பார்கள்? ஆனுல் இன்றைய நிலையில் திராவிடக் கழகத் தோழர்களில் தந்தைப் பெரியாரைப் புரிந்தவர்கள், அறிந்தவர்கள் அவர் வழியில் நடப்பவர்கள் இருக்கிருர்களா? உண்டா? என்று ஆராய்ந்து பார்த்தால் ஒருவராவது கிடைப்பார்களா! என்பது ஐயமே!

தந்தை பெரியார் ஏன் மதத்தை அதுவும் பொதுவாக இந்து மதத்தை எதிர்த்தார் தாக்கினுர். என்பதைத் தி. க தோழர்கள் மீண்டும் சிந்திக்க வேண்டும், பகுத்தறிய வேண்டும். உண்மை நிலையை உணரவேண்டும் தி. க. வினர் மட்டுமின்றி இந்து மதத்தை வெறுப்பவர்கள், ஒதுக்குபவர்கள் அனைவருமே நன்கு சிந்திக்க வேண்டும். அப்பொழுது தான் சித்தர் நெறியான இந்து மதத்தை அறிய முடியும் முடியும்! முடியும்!


63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளையும் பகுத்தறிவார்களேயானுல் பெரியார் ஈ. வெ. ரா. வும் மேற்படி 63 நாயன்மார்களைப் போல் ஒரு மக்கள் தொண்டரே என்பதைப் புரிந்து கொள்வார்கள், மேலும் 63 நாயன்மார்களும் அவரவர் காலத்தில் பரந்து பட்ட தமிழ் நாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே செயல்பட்டுச் சென்றிருக்கிருர்கள் என்ற பேருண்மை விளங்கிடும்.

பெரியார் ஈ. வெ. ரா வோ தமிழகம் முழுவதும் செயல்பட்டிருக்கிறார். உலகம் முழுவதுமுள்ள தமிழர்களின் உள்ளங்களையும் இல்லங்களையும் தெளிவடையச் செய்திருக்கின்றார். எனவே மக்கட் தொண்டர்களின் வரிசையில் இடம் பெறுகின்ற தகுதி தந்தை பெரியார் ஈ வெ. ரா வுக்கு உண்டு! உண்டு! உண்டு! எனவே பெரியாரின் பெயரால் தமிழர்களே ஒன்று கூடுங்கள். ஒற்றுமைப்படுங்கள்! 'குருதேவர்' அறிக்கை மேன் மேலும் சிறப்புற்றுவளர வாழ்த்துகிறோம்.

---

# "அன்பு சித்தர் ஞாலகுருவை காணலாம் வாரீர்! வாரீர்! வாரீர்!"







*கீழ் நோக்கிச் செல்வதுதான் தண்ணீரின் தன்மை: ஆனால், கதிரவனே தண்ணீரை ஆவியாக மாற்றி மேல் நோக்கி எடுத்துச்சென்று கருமேகங்களாக மாற்றி பருவகாலம் வரும்போது அதை பயிரினங்களும், உயிரினங்களும், செழித்து*

வளர்ந்திட மழையாகப் பொழுவிக்கிறது, இதே போன்றுதான், நம்முடைய அறிவை ஆற்றலை, திறமையை, எண்ணத்தை' முழுமையான குருபத்தியை, இன ஒற்றுமையை மொழிப்பற்றை, நாட்டுப்பற்றை, மதப்பற்றை, உண்மையின் தத்துவங்களை, கீழ் நோக்கி இழுத்துச் செல்கிற வட ஆரியர்களின் சூழ்ச்சியிலிருந்து, அடிமைத்தனத் திலிருந்து, இழிவு மனப்பான்மையிலிருந்து, விலக்கி ''கதிரவனாகிய குருதேவர் நம்மை மேல் நோக்கி எடுத்துச் சென்று உயர்ந்த தத்துவங்களை, அறிவை, ஊட்டி வளர்த்து அருள் மழையைப் பொழிவிக்கின்ற கருமேகங்களாக்கி உரிய காலம் வரும்போது பயிரினமும், உயிரினமும் செழித்திட தனிமனித வாழ்வு; குடும்ப வாழ்வு; சமுதாய வாழ்வு; தழைத்தோங்க உலகுக்கு வழங்கிகொண்டிருக்கிறார், இந்த உண்மையினை மனப்பூர்வமாக நாம் உணருவோமானால், குருதேவர் மீது நமக்கு கசப்போ, மறுப்போ, வெறுப்போ, நகைப்போ' பழிப்போ, இழிப்போ; விரோதமோ, துரோகமோ, ஏற்படுவதற்குப் பதிலாக அன்பும் பாசமும், கனிவும், பணிவும், உயர்ந்த எண்ணமும், குருவிடம் பயமும், பத்தியும், ஏற்பட்டிடும்! ஏற்பட் டிடும்! ஏற்பட்டிடும்

காலைக்கதிரவனின் ஒளிபட்டு இனியும் நாம் உறங்கிக்கொண்டிருப்பது கேவலம் பறவைகளின் வைகரைக்குரல் கூடகேட்கின்றதுஎன்றுஎண்ணிஇதழ்களை மூடி துயிலுறங்கும் பலவகைப்பட்ட பல வண்ணங்களுடைய மலர்க்கூட்டம் தன் இதழ்களை விரித்து மலர்ந்து கதிரவனின் பொன்னிற ஒளியோடுஇறைவனால்தனக் களிக்கப்பட்ட வாசனையையும் கலந்து மணம் வீசிடும் அந்த மலர்களிலே ''அன்பு சித்தர்' கருவூரரைக் காணலாம்''

வனங்களிலே வாழ்ந்திடும் வானரங்கள் தேன்குடிக்க ஆசைப்பட்டு தேன் கூட்டைக் கலைத்து கைகளிலேதேனை அள்ளிடும்போது தேனீக்களால் தாக்குண்டு அடுத்தக் கிளைக்குத் தாவிடும் போது கேட்பாரற்று வேரிலே பழுத்த பலா, தானே பழுத்து வெடித்து அதிலிருந்துச் சொட்டும் மதுரத்தைக் கண்ட வானரம் தேனை அள்ளிய கையோடு பலாவிலிருந்து சிந்தும் மதுரத்தை தொட்டுத் தான்நாக்கிலே வைத்து இரண்டு மதுரமும் சேர்ந்து தேனினும் இனிய மதுரத்தை சுவைத்திடும் அந்த சுவையிலே ''அன்பு சித்தர் கருவூரரைக் காணலாம்''

சந்திரனைக் கண்டு இதழ் விரித்து அல்லி மலரின் தேனை எடுக்க வந்த கண்ணைக் கவரும் கருவண்டுகளின் ரீங்காரத்திலே ''அன்பு சித்தர் கருவூரரைக் காணலாம்.''

மகுடியின் இசையிலே மயங்கி படம் எடுத்து ஆடும் கருநாகத்தின் பேரழகிலே ''அன்பு சித்தர் கருவூரரைக் காணலாம்''

அந்த மகுடியின் இசையோடு சேர்ந்து ஏழு சுவரங்களிலே ''அன்பு சித்தர் சுர குருவைக் காணலாம்''

வன விலங்குகளுக்கு அரசனான சிங்கத்தின் கர்ச்சனையிலே ''அசுர குரு வைக் காணலாம்''

அடைகாத்துக் குஞ்சு பொரித்து கோழி ஒரு சிறு தானியத்தைக் கண்ட வுடன் தன் குஞ்சுகளை அழைக்க; இரை பொறுக்கக்கூடத் தெரியாத குஞ்சுகள் பருத்தியிலே இருந்து அன்று பறித்தப் பஞ்சுக்குதான் கால் முளைத்து ஓடி வருகிற தோ என்று எண்ணுகின்ற அளவுக்கு உள்ளத்தை கொள்ளை கொள்ளும் அழகுடன் கீச். கீச்' என சத்தம்போட்டு தாயிடம் ஓடிவந்து இரைதேடும் அந்தக்குஞ்சுகளின் மென்மையிலே ''அன்பு சித்தர் கருவூரரைக் காணலாம்''

*தன் மணி வயிற்றிலே பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த குழந்தைக்கு பால் புகட்டிடும் தாய்; தன் சின்னஞ்சிறு இதழ்களால் பாலை சுவைத்தக் கொண்டு இன்னொரு கையால் தன் தாயின் கழுத்திலே தொங்கும் மணிச்சரத்தை பிடித்துப் பிடித்து விளையாடும் போது தன்னையும், சுற்றத்தையும், ஏன் இந்த உலகத்தையே மறந்து பேரின்பம் காணும் அந்தத்தாயின் முகத்திலே "அன்பு சித்தர் கருவூரரைக் காணலாம்".*

**குயிலின் குரலிலே! ஆடும் மயிலிலே! பாடும் இசையிலே! நிலவின் ஒளியிலே! விண்மீன்களின் கூட்டத்திலே! நீரில் பாயும் வண்ண மீன்களிலே! பூத்துக் குலுங்கும் மலர்களிலே அதன் மணங்களிலே! கனிகளின் சுவையிலே! கன்னிப்பெண்ணின் இன்பத்திலே! பாவையின் கண்களிலே! பச்சிளம் குழந்தைகளிலே! அதன் மழலை மொழிகளிலே! தாயின் அன்பிலே! தந்தையின் பாசத்திலே! தமிழின் இனிமையிலே! தெளிந்த நீரோடைகளிலே! பசுமை வயல்களிலே! பாட்டின் இனிமையிலே! நாதங்களின் ஓசையிலே! இறைவனின் திரு முகத்திலே! வான வில்லின் வண்ணங்களிலே! பனியின் குளுமையிலே! பறவைகளின் அழகிலே! இப்படி உலகின் இயற்கையிலே மனிதனின் மனநிலைக்கு சிந்தைக்கு கண்களுக்கு, செவிகளுக்கு நாசிக்கு, நாக்குக்கு உயிருக்கு, உள்ளத்துக்கு, எது எது இன்பத்தை அளிக்கின்றதோ அத்தனையிலும் பன்னிரெண்டாவது பதினென் சித்தர் பீடாதிபதி, அண்ட பேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானம் குருமகா சன்னிதானம், சித்தர் கருவூரர் அவர்களைக் காணலாம்**


**வாரீர்! வாரீர்! வாரீர்!**

*படைப்பு*

*அன்பு,*

*அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம்*



# கார்ல்மார்க்சு நவநாத சித்தராக அறிவிக்கப் பட்டது ஏன்?

*[இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவரின் விளக்கம்]*

மேலை நாட்டில் பிறந்து **'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'** என்ற தத்துவத்திற்கு விளக்கமாக ஏழை, எளிய பாட்டாளி வர்க்கம் நல்வாழ்வு வாழ வாழ்வதற்குச் சிந்தித்துப் பொதுவுடமை சிந்தனையைக் கண்டறிந்த சிந்தனைச்சிற்பி காரல் மார்க்சு அவர்களை சித்தர் நெறிப்படி **'நவநாத சித்தர்'** என்று சிறப்புப் பட்டம் கொடுத்து ஏற்றுப் போற்றுகிறோம் யாம் இந்தக் காரல் மார்க்சுக்கு மட்டும் பதினெண் சித்தர்களின் வரலாறுகளோ, வாழ்வியல் நெறிகளோ, சமுதாய

அரசியல் சிந்தனைகளோ. உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் காணும் குறிக்கோளோ, உலக ஆன்ம நேய ஒருமைப்பாடமைக்கும் செயல்பாடோ, உலக இனங்களின் விடுதலைக் கொள்கையோ, மொழி விடுதலைக் கொள்கையோ.........தெரிந்திருக்கு மேயானால்; இவர், தனது நெறிக்குக் **கம்யூனிசம்** என்று பெயரிடாமல் **சித்தரிசம்** என்றே பெயரிட்டிருப்பார். இவர், உலகக் கிறித்துவ, முகமதிய மதத்தைப் பற்றித்தான் அறிந்திருந்தார், **இவரால், வட ஆரியர்களின் சமசுகிருத மொழியின் இலக்கியங்களே பெரும்பாலும் படிக்கப்பட்டு; வட ஆரிய வேத நெறி தான் இந்து மதம் என்று தவருக தவறாக உணரப்பட்டிருந்தது எனவே தான், அவர் 'இந்திய மண்ணில் புரட்சி எளிதல்ல'** 'ஆங்கிலேயரின் கொடுங்கோலாட்சி முறியடிக்கப் படுவது எளிதல்ல!'.........என்றெல்லாம் கட்டுரை எழுதிச் சென்றிட்டார். ஆகவே மார்க்சீயச் சிந்தனைகள் எனும் வைரங்களைப் பதினெண் சித்தர்களின் தத்துவம் எனும் தங்கத்தால் செய்யப்படும் நகைகளில் பதித்து இந்திய மக்களை அழகு படுத்த வேண்டும். **மார்க்சீயத்தின் கண்ணோட்டத்தை விடப் பதினெண் சித்தர்களின் கண்ணோட்டம் புரட்சி மிக்கது! புதுமை மிக்கது! சமத்துவ மிக்கது! வறுமையைப் போக்கக் கூடியது! பொதுவுடைமையை விளைவிக்கக் கூடியது! மனிதத் தன்மையைப் பாதுகாக்கக் கூடியது! மனித வாழ்வை இனிமையும் கனிவும் அன்பும், பண்பும், பரிவும், பாசமும், நட்பும், தோழமையும் உடையதாக ஆக்குவது! எனவே தான், சிந்தனைச் சிற்பி காரல் மார்க்சு அவர்களைப் புரிந்து; 'நவநாத சித்தர்**, என்று அறிவித்து நம்முடன் இணைத்துள்ளோம் யாம் இதைப் புரிந்து கொள்ளாதவர்கள்; இன்னும் நம்மிடையே உள்ளார்கள், என்பது வருந்தத்தக்கதே! எனவே நன்கு படித்தறிந்து விளக்கம் கூறிப் புரியவையுங்கள்.

மார்க்சீய வாதிகள் கூட; நாம், அவரை நவநாத சித்தர் என்று அழைப்பதற்கு மறுப்பும், எதிர்ப்பும் தெரிவிக்கின்றார்கள். அதாவது, முதலாளித்துவ வாதிகள் போல் மடமை மிக்க மதவாதிகள் போல் இந்த அப்பாவியான மார்க்சீய வாதிகளும் காரல் மார்க்சு தங்களுக்கே சொந்தமென்று உரிமை பாராட்டுகிறார்கள் இவர்களெல்லாம் "எப்படியாவது யார் மூலமாவது மார்க்சீயம் வெற்றி பெற்றால் போதும்", என்று எண்ணக் கூடிய உண்மையான பொதுவுடமைவாதிகளாக மாற்றப்பட்டேயாக வேண்டும் அதற்காகத் தான், நாம், பொறுப்போடும் பொறுமையோடும் பூசைக்கு ***கதம்பமாலை** கட்டுவது போல், ***கலப்படமாலை** மார்க்சீய சிந்தனைகளை இந்து மதத்தத்துவங்களோடு கலந்து பேச்சிலும் எழுத்திலும் அச்சிட்ட அறிக்கையிலும் கலந்து பரப்பி வருகிறோம் யாம் இதற்காக, நமக்கு நன்றி கூற வேண்டிய மார்க்சீய வாதிகள், அப்பாவித்தனமாக நம்மை எதிர்க்கிறார்கள் எனவே நம்மவர்கள் உணர்ந்தும் உணர்த்தியும் இந்திய மார்க்சீயவாதிகளைத் திருத்தி நம்மவர்களாக்க முற்பட வேண்டும். அதாவது, இன்றைய நிலையில் பெரும்பாலான திராவிட கழகத்தவர்கள் [பெரியாரின் தொண்டர்களும் ஆதரவாளர்களும்] நம்மை 'புரிந்து விரும்பி நம்பி நம்மோடு செயல்பட ஆரம்பித் திருப்பது போல்; மிக விரைவில் இந்திய மார்க்சீய வாதிகள்; நமது தோழர்களாகவும், நண்பர்களாகவும், தொண்டர்களாகவும்மாறிவிடுவார்கள். அதன் பிறகு தான், நாம், தென்னிந்திய அளவிலும் இந்திய அளவிலும் மிகப்பெரிய வெற்றிகளைப் பெறமுடியும். இவற்றை அறிந்தும் அறிய வைத்தும் செயல் படுங்கள், **வெற்றி நமதே.**

**மார்க்சீயம் மலர்ந்துள்ள இரசியாவிலேயே 70 ஆண்டுகளாகியும் மெக்கா யாத்திரை வரும் முகமதியர்களும், செருசலத்திற்குப் புனித யாத்திரை வரும் கிருத்தவர்களும் மத உரிமையோடும் பெருமையோடும் வாழுகிறார்கள் என்ற பேருண்மையை இந்நாட்டு மார்க்சீய வாதிகளுக்குவிளக்கிட வேண்டும் அப்பொழுதுதான் மாமேதையான இலெனின் "காரல் மார்க்சு**

தொடர்ச்சி 26-ம் பார்க்க

# வியத்தகு குருபாரம்பரியச் செய்திகள்

1) 'குருபாரம்பரியம்', 'அரசபாரம்பரியம்', 'இலக்கிய பாரம்பரியம் என்ற மூன்றும் அனாதிகாலம் தொட்டு எழுதப்பட்டு வருபவை. பதினெண்சித்தர் 'பீடாதிபதிகள் எழுதுபவை மட்டுமே இரகசியமாகக் காக்கவும். வளர்க்கவும் செயல்நிலை பெறவும் வேண்டும்

2) மனிதன், தெய்வீக உலகில் அநுபவம் பெற்றிடப் பூசை செய்யும் தகுதியை இரண்டு மனைவிகளோடு வாழும் போதுதான் பெறுகிறான்- அதாவது. இரண்டு மனைவிகளை உடையவன் தான் பூசை செய்ய வேண்டும்' என்று குருவாசகமும் திருவாசகமும் கண்டிப்பாகக் கூறுகின்றன.

3) எந்த ஒரு மனிதன் ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையாகிறானோ! அவன்தான் பஞ்சபூதங்களை வெல்கிறான் இவனே ஒன்பது குழந்தைகளுக்குத் தந்தையாகும் போது கோள்களை வெல்கிறான் நாற்பத்தெட்டுக் குழந்தைகளுக்குத் தந்தையாகிறவனே தெய்வநிலை, காயகல்பநிலை, உயர் சித்திநிலை பெற்றவனாகிறான்.

4. ஒன்பது திருமணங்கள் செய்து இனிய இல்லறம் நடத்துபவனே கடவுளாகிறான் அதாவது 'மூன்றாண்டுக்கொரு திருமணமென ஐந்து திருமணங்கள் செய்பவன் பிறப்பை வெல்லுவான்; ஒன்பது திருமணங்களைச் செய்பவன் பிறவா யாக்கைப் பெரியோன் என்ற சிவநிலையைப் பெறுவான்' - என்று கருவாசகமும் தருவாசகமும் கண்டிப்பாகக் கூறுகின்றன.

5. பெண்ணே இம்மண்ணுலகின் சத்தி. அவளோடு இணைந்து வாழ்வதே சித்தி; அவளைப் பேணுவதே பத்தி.

6. பெண்ணை மறந்தோ துறந்தோ மறுத்தோ வெறுத்தோ வாழ்பவர்களில் ஞானசித்தர்களைத் தவிர மற்றவர்கள் எண்ணற்ற பிறப்புக்களெடுத்துத் துன்புற வேண்டிய சாபத்தைப் பெற்ற பாவியாவார்கள்,

7. பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலக அருட்பயிர் வித்துக்களாக உருவாக்கிச் சென்றுள்ளவர்களே தமிழர்கள். இவர்கள் அனைத்து மொழிவழி இனத்தாரிலும் திருமணம் செய்து அருளுலக வாரிசுகள் தழைத்துப் பயிராகச் செய்ய வேண்டும். அதாவது. ஒவ்வொரு தமிழனும் தன் வாழ்நாளுக்குள் ஐந்து மொழிப் பெண்களையாவது மணந்து. முப்பது குழந்தைகளுக்கு மேல் அருளுலக வாரிசுகளாகப் புத்துயிர்ப்புப் பணிக்காக உருவாக்க வேண்டும். தமிழச்சியின் குழந்தைகள் அருளுக்கும் பிறமொழிச்சிகளின் குழந்தைகள் மருளுக்கும் விதைமுதலாகிடுவர். எனவே, தமிழினம் குறையும் போது அருளுலகம் இருண்டு போகும். வறண்டு போகும்: அநீதி அரசாட்சி செய்யும் திருடர்கள காவலர்களாக இருப்பார்கள். அயோக்கியர்கள்-நீதிபதியாகஇருப்பார்கள் என்றுஅருள்வாசகமும் மருள்வாசகமும் வலியுறுத்திக் கூறுகின்றன

8. மங்கையென்பவள் மாதந்தோறும் மலருகின்ற மலராவாள் அவளைத் தீட்டு என்றோ! விதவை என்றோ ஒதுக்குவது மாபெருந் தவறு. மடமை. மலரில்லாச் சடங்கில்லை என்பதால் எச்சடங்கிலும் மலரினும் உயர்ந்த மங்கையை விலக்குவது கூடாது; அது பாவமே

9. தமிழ்க் குழந்தைகள் யவனம், சோனகம் பிராகிருதம், சமசுக்கிருதம் .........முதலிய பிற மொழிகளைப் படிக்கும்வரை இனத்துக்கும் மொழிக்கும் நாட்டுக்கும் துரோகிகள் தோன்றிக் கொண்டு தானிருப்பார்கள்- பதினெட்டாண்டுப் பருவம் கடந்த பிறகே பிறமொழிகற்கும் முறைதான் கற்புக்கெடாமல் இனப்பற்றும் பாசமும் ஒற்றுமையும் பெற்று வாழச்செய்யும் 'தமிழர்களை;

11 தமிழர்கள், பிற இனத்தாரைக் காமப் பெண்டிராகப் பயன்படுத்தாமல். உரிமை மனைவிகளாக்கி வாழ்ந்திருப்பார்களே யானால்: உலகம் முழுதும் இந்துமதச் செழிச்சியும் ஆட்சியும் ஏற்பட்டிருக்கும்.

10) தமிழினம் விலங்கினத்திலும் கேவலமாக ஒற்றுமையற்றுத் தன்னல வெறி -யில் பிரிந்து சிதைந்து வாழுவதை மாற்றிட மிட்டாய்க்கடை பட்டுக்கடை வட்டிக் கடை தமிழினத்தால் நிகழ்த்தப்படல் வேண்டும்.

11) தமிழின விரோதிகளின் வெற்றியும் வலிமையும் தமிழினத் துரோகிகளின் பேராசையிலேயே உள்ளன. எனவே, துரோகிகளை ஒழிப்பதே விரோதிகளை அழிக்கும் பணியென உணர்ந்து செயல்படலே தேவை.

12) பதினெண் சித்தர்களின் கதை, காதை, கவிதை, கீதை, வாக்கு, வாக்கியம் வாசகம்.........எனும் இலக்கியங்களே தமிழர்களைத் தன்மானம், இனமானம், மொழி -யுரிமை, நாட்டுப் பெருமை, இன ஒற்றுமை, மொழிப்பற்று......முதலியவை பெற்றிடச் செய்யும் எனவே, இவை, படியெடுக்கப்பட்டு நாடெங்கும் பரவிடப் பொருளுதவியும் உடலுழைப்பும் வழங்குவதே பல யாகங்களையும் யக்ஞங்களையும் வேள்விகளையும் செய்த பயனைத்தரும்.

தொகுத்தவர்;- ஏளனம் பட்டியார் உ. இராமசாமி பிள்ளை

வழங்குபவர்:- இந்துமதத் தந்தை ஞானச்சாரியார் ஞால குரு சித்தர் கருவூரர்

---

# குருவே போற்றி

உற்றதோர் குருவைச் சேர்ந்து
உறுதியாய் உன்னை ஈந்து
பற்றுடன் பாசம் வைத்து
பரிவுடன்குற் றேவல் செய்து
அட்டமா சித்து யாவும்
அமுதமாய் கொள்ள லாமே!

பித்தனாய் உளர வில்லை
பேருருட் கொடை வள்ளல்
இராசி வட்ட திறைவுடையார்
ஆசி பெற்ற அடியவனாய்
காசினி முழுமை பெற
கண்டவழி யானு ரைத்தேன்

ஏட்டினில் இல்லை ஐயா!
இடு,தொடு, சுடும் றையே
காட்டினில் அமர்ந்து நீயும்
கடுந்தவம் புரிந்த போதும்
கூட்டினில் குருவ மர்ந்து
காட்டிடும் வழிபோ லாமோ?

வாட்டிடும் வினைய னைத்தும்
வாடியே அழிந்து போகும்
ஏற்றிடும் கடமை யாவும்
எளிதினில் வெற்றி யாகும்
போற்றிடு மாறுமே! குருவின்
பொன்னடி போற்றி போற்றி.

-கவி க. செல்வநாயகம்

மதம் ஒரு நஞ்சு என்று கூறவில்லை. மதம் மக்களை மயக்கும் அபின் என்று தான் கூறினர். எனவே போதைப் பொருளான மதத்தை அளவோடு கையாளப்படுவது தவறல்ல!......'' என்று மிகத் தெளிவாக முடிவெடுத்துச் செயல்பட்டிட்ட பேருண்மை நமது இந்திய மார்க்சீய வாதிகளுக்கு விளங்கிடும். இதில் ஐயமுள்ளவர்கள் சோவியத்நாடு இதழைப் புரட்டிப் பார்ப்பார்களேயானல் ஆண்டு தோறும் மக்கா செல்லும் முகமதியர் பற்றிய விபரமும் பிற விபரமும் அறிய முடியும்.

'காரல் மார்க்சு குறிப்பிட்ட மயக்க மருந்து போன்ற மதங்களையே; மிகப்பெரிய புரட்சித்தலைவனை லெனினும் அவனது மார்க்சீய இயக்கங்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறன என்கிற போது; ''மதம் ஒரு சமுக விஞ்ஞானமே,'' ''மதம் மனிசர்களை மனிதர்களாக்கிய மருந்தே,'' என்ற தத்துவத்தைக் கூறும் பதினெண் சித்தர்களின் இந்து மதத்தை [இன்றுள்ள வட ஆரிய நெறி கலந்திருக்கும் பிருமணத் தலைவர்களால் வழிகாட்டப்படும் ஹிந்து மதமல்ல!] இந்திய மார்க்சீய வாதிகள் என்றைக்கு முழுமையாக நம்பி விரும்பி ஏற்றுப் போற்றி மதவாதிகளாகவே மாறி மத வழியாகச் சமுதாய அரசியல் மாற்றங்களை உருவாக்கும் உண்மையான செயல் நிலைக்குத் தயாராகிர்ருகளோ அன்றைக்குத்தான் மார்க்சீயம் மறுப்பிறப்பெடுக்கும் இந்திய மண்ணில்! அன்றைக்குத்தான், மார்க்சீயக் கனவுகள். நனவாகும் இந்திய மண்ணில்; இல்லையேல். மார்க்சீயத்திற்காக முதல் உலகம் கம்யூனிச இயக்கம் என்ற ஒன்றை நிறுவிய* [*இலெனினுக்கு முன்னல். இரசியப் புரட்சிக்கு முன்னல்; செக்கோசுலோவேக்கியா நாட்டில் இந்துக்களாகிய திரு. M. P. பிள்ளையும், திரு. M. N. இராயும் 'மார்க்சீய கனவுகளை நனவாக்குவதற்காக உலக கம்யூனிச இயக்கம் என்ற ஒன்றை [The International Communist Party] உருவாக்குகினர்கள்; என்ற வரலாற்றுப் பேருண்மை இந்திய மார்க்சீய வாதிகளால் மட்டும் மறுக்கப்படுவது வருந்தத்தக்கது! திருத்தத் தக்கது] திரு M. P. பிள்ளையவர்களும், திரு. M. N. இராய் அவர்களும் 'இந்திய மண்ணில் மார்க்சீய மரணம்' [The Death of Maxisim In India என்று தொடர் கட்டுரைகளும் நூல்களும் எழுதிச்சென்று கருத்தில் என்றைக்குமே மாற்றம் ஏற்படவே முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

பன்னிரெண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகிய யாம் தான் எமது தந்தையாகிய காகபுசுண்டர் எனப்படும் காக்கையர் ம பழனிச்சாமிபிள்ளையுடனும் அவரது உற்றத் தோழரான திரு. M. N. இராயுடனும் நெடிய பெரிய தொடர் விவாதங்களை நிகழ்த்தி; 'இந்திய மண்ணில் மார்க்சீய மறுபிறப்பு' [The Rebirth of Marxism in the Indian Soil] என்று தொடர் கட்டுரைகளும் நூல்களும், அறிக்கைளும் அறிவிக்கைகளும் அஞ்சல்களும் உரையாடல்களும், விவாதங்களும்; சொற்பொழிவுகளும் வழங்கிச் செயல்பட்டு வருகிறேம் இப்படி காரல்மார்க்சு இந்து மறுமலர்ச்சிக்காக இந்திய மக்களின் இன விடுதலைகளுக்காக மொழி விடுதலைகளுக்காக சமுதாய சமத்துவத்துக்காக அரசியல் பொதுவுடமைக்காக இந்து மறுமலர்ச்சி இயக்கச் சிந்தனையாளர்களுள் ஒருவராக ஏற்றுப் போற்றப் படுவதை முதலில் நம்மவர்கள் நன்கு புரிந்து தெளிவடைய வேண்டும்! இதற்கு அடுத்த கட்டமாகவே நம்மிடம் விளக்கம் கேட்டு வரும் அனைத்துச் சமய சமுதாய அரசியல் கலை இலக்கியத்தொழில் வாதிகளுக்கு காரல்மார்க்சு எப்படி நவநாத சித்தராக ஆக்கப்பட்டுள்ளார் என்று புரிய வைத்துத் தெளிவிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம்மவர்களுக்கிடையேயும் நம்மை நாடி வருபவர்களுக்கிடையேயும் கருத்துக் குருடர்களோ கொள்கைப் போலிகளோ, குறிக்கோள் காலிகளே செயல்நிலைக் கருங்காலிகளோ, துரோக விரோதச் செயல்களைச் செய்யும் கூலிகளோ.....தோன்ருமல் தடுக்க முடியும்! தடுக்க முடியும்! தடுக்க முடியும்! எனவே நம்மவர்கள் யாரையும் அவசரப்பட்டோ, ஆத்திரப்பட்டோ, குறை கூறி மறுத்தும் வெறுத்தும் ஒதுக்கிடாமல் பொறுப்போடும் பொறுமையோடும், அடக்கத்தோடும் அமைதியோடும், நிதானத்தோடும், சமாதானத்தோடும்......கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல் மூலம் செயல்படக் கற்றுக் கொள்ள வேண்டும்.



# சாமியே சரணம்!
# ஐயப்ப சரணம்!

[14—5—85 அன்று சேலம் வேம்படி தாளத்தில் குருதேவர் ஆற்றிய நெடிய உரையிலிருந்து...........]

—— ......ஐயப்பனைப் பற்றிச் சொன்னார்கள்! இன்றைக்குள்ள ஐயப்ப வழிபாடு சுமார் முப்பது நாற்பது ஆண்டுகளுக்குட் பட்டதுதான். சபரி மலையில் உள்ளது சபரி என்கின்றபெண்ணுடைய சமாதுதான் அது. இராமாயணக் காலத்திலே வாழ்ந்தவள்! அவளது அருளால் தோன்றியவன் தான் இவர்கள் சொல்கின்ற ஐயப்பன் அவனது காலம் சுமார் 500 ஆண்டுகளுக்குட் பட்டதுதான். ஐயப்பனுடைய சீடன் ஒரு முகம்மதியன்! அவனுடைய சமாதி சபரி மலைக்குப் போகும் வழியில் உள்ளது; என்றால் ஐயப்பனுடைய காலத்தைக் கண்டு கொள்ளுங்கள்!

முகம்மது நபி தோன்றியே சுமார் 1200 ஆண்டுகள் ஆகின்றன. முசுலீம்கள் இந்தியாவுக்கு வந்தே எழுநூறு ஆண்டுகள் ஆகின்றன. அதுவும் தமிழன் – இந்து முசுலீமாக மாறியவன் அவனுடை ய பத்தனாக மாறினால் என்றால்.........கணக்குத் தெரியாதவன் வீட்டிலே நித்தம் நித்தம் சண்டை என்பார்கள். ஐந்து பைசா, பத்துப் பைசா, என்றால் என்னவென்று தெரியாதவர்கள் வியாபாரம் செய்யவே முடியாது. ஐயப்பனுடைய காலம் சுமார் 500 ஆண்டுகளுக்குள்ளே என்று கூறினால் சிலர் சண்டைக்கு வருகின்றார்கள். அவன் அன்றிலிருந்தே உள்ளான்! என்றைக்குத் தோன்றினான் என்றே தெரியாது! என்றால் முகம்மதியான் எப்படி ஐயப்பனின் சீடனாக வருவான் இந்தக் கணக்குப்படி பார்த்தால் ஐயப்பனின் காலம் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்குள்ளேதான்.

'சபரி' என்கின்றவள் இராமனுடைய காலத்திலே வாழ்ந்த பெண். எரிக்கப் பட்டவள்! தீண்டத்தகாதவளாககருதப்பட்டவள்! மறந்து விடக் கூடாது நண்பர்களே! இராமன் காட்டுக்கு வரும் போது பெரிய பெரிய ரிசிகளும், முனிவர்களும் இராமனை சபரியைப் பார்க்கவே கூடாது! அவள்தாழ்த்தப்பட்டவள் தீட்டு ஒட்டிக்கொள்ளும்! கண்டால் குளிக்க வேண்டும் என்று கூறினார்கள். அப்படிப்பட்டவளின் சமாதிதான் சபரிமலையில் உள்ளது. ஐயப்பனுடையது அல்ல!

எவ்வளவு பெரிய மோசடி பாருங்கள்! இன்றைக்கு சபரி மலையிலே ஐயப்பன் இருப்பதாக கூறுகின்றார்கள்

அதுமட்டுமல்ல! பெண்ணையே பார்க்கக் கூடாது! தொடக் கூடாது! பாவம் தீட்டு! என்கின்றார்கள்! காட்டு மிராண்டித்தனம்! பெண்ணை மறுப்பவனே! வெறுப் பவனே! துறப்பவனே! கடவுள் நெறிக்கு ஏற்றவனல்ல! மறந்து விடக்கூடாது; ஐயப்பனைக் கும்பிடுபவர்களைத் தாக்க வேண்டும் என்பதற்காகக் கூறவில்லை ஐயப்பனின் விரதம் நம்மபண்பாட்டுக்கு விரோதமான ஒன்று! துரோகமான ஒன்று! பெண்களை மறுப்பது, துறப்பது எப்படி நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? விரதம் என்ற பெயரால் பெண்ணோடு வாழ மாட்டேன்! பெண்ணின்பம் துய்க்கமாட்டேன்! என்று கூறினால் நீ வழிபடுகின்ற, தெய்வங்களெல்லாம் பெண்டாட்டிகளோடு இருக்கின்றன நீ வாழ்கின்ற ஊரைச்சுற்றி காளியம்மன்களும் மாரியம்மன்களும் இருக்கின்றன

ஐயப்பன் மலைக்குப் போவதற்கு முன்னால் அம்மன் கோவிலுக்கு விளக்குப் போட்டு விட்டுப் போகிறாய்? இது என்ன நியாயம்! பொம்பளையைத் தொடக்கூடாது! பார்க்கக்கூடாது! அம்மன் கோவிலுக்கு மட்டும் போகலாமா? விளக்குப் போடலாமா?

இதைக் கேட்டால் எங்களை எதிர்க்கின்றார்கள்! நாங்கள் யாரோடும் இதைப் பற்றி விவாதிக்க தயாராக இருக்கின்றோம் இலக்கிய பூர்வமாக வரலாற்று பூர்வமாக கால அளவீட்டின் பூர்வமாக விளக்கிடத் தயாராக உள்ளோம் கடவுள் இல்லை யென்று சொல்பவர்கள்ல்ல நாங்கள்! கடவுளைப்பார்க்கலாம் உன்னை கடவுளாக மாற்றுகின்றேன்' என்று சொல்லுபவர்கள் நாங்கள்! கடவுளையே உருவாக்குகின்ற சித்தன் வந்திருக்கின்றேன் நான் கூறுகின்றேன் ஐயப்பன் சாமி இல்லை ஐயப்பன் சமாதி இல்லை! பெரியார் ஈ.வெ. ராமசாமி நாயக்கன் கூறவில்லை நான் கூறுகின்றேன். தமிழன் ஐயப்பன் கோவிலுக்கு போவதென்பது அடிமுட்டாள்தனம் ........ ஐயப்பனை எதிர்க்கவோ இல்லை என்றோ? கூறவில்லை! ஐயப்பனை வழிபடுகின்றவர்கள் தவறு செய்கின்றார்கள்! அதைத்தான் கண்டிக்கின்றேன்.........

---

# அருட்செல்வரின் தன்மானமிலா பதிலுரை

*[பொள்ளாச்சி ந. மகாலிங்கம்]*

*தமிழ் மக்கள் அனைவரும் வடமொழி படிக்க வேண்டும் - என வலியுறுத்தி ந. மகாலிங்கம் செய்தியேட்டுக்கு அளித்த நேர்காணலுக்கு மதுரை அடியான்கள் மறுப்புத் தெரிவித்தனர் வள்ளலாரைப் பழித்தபோது வாய் திறவாத அருட் செல்வர் இதற்கு விரைந்து பதிலெண் மருக்கு வழங்கிய மடலின் சுருக்கம்*

*அன்புடையீர்!*
*வணக்கம்.*

*தாங்களும் தங்களுடன் சேர்த்து பதினெழு பேரும் கையெழுத்து இட்டு 13—2—85 அன்று எழுதிய கடிதம் கிடைத்தது. ஆழ்ந்துப் படித்துப் பார்த்தேன். சமஸ்கிருதம் எங்கிருந்தோ வந்த ஆரியர் மொழி என்பதை மொழி ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சமஸ்கிருதம் தாய்மொழி தமிழாக இல்லாதவர்களுக்காகத் தமிழனால் தமிழ்ப் பண்பாட்டைக் கற்றுக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட மொழி. அதற்குத் தமிழில் வடமொழி என்று பெயர். வடமொழியை வடு-அல்-மொழி என்று பிரித்துப் பொருள் காணவேண்டும்; ஓசைக்குறை இல்லாமல் செம்மையாக்கப்பட்ட மொழி என்பது இதன் பொருள்.*

*சமஸ்கிருதம் எந்த ஒரு இனத்துக்கும் தாய்மொழி இல்லை என்ற விவரத்தையும் தாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இன்று சமஸ்கிருதத்தில் இருக்கும் பல சாத்திரங்களின் மூலம் தமிழ் என்பது சமஸ்கிருதத்தையும் தமிழையும் நன்கு அறிந்த ஆய்வாளர்களின் அபிப்பிராயம் ஆகும். சமஸ்கிருதம் படிப்பதனால் தமிழன் மேலும் சிறப்பாகத் தமிழை வளர்க்க முடியும் என்பது மொழி ஆராய்ச்சியாளர்களின் முடிவாகும். சமஸ்கிருதம் உலகத்தில் இருக்கும் பழைமையான மொழிகளில் ஒன்று என்பது உலக மொழி வல்லுனர்களால் ஒப்புக்கொண்ட மறுக்கமுடியாத உண்மை.*

*தாங்கள் நம் தாய் மொழியின் சிறப்பை நன்கு உணர்ந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தாங்கள் தமிழைக் "காட்டுமிராண்டி மொழி" என்று மக்களிடம் பிரச்சாரம் செய்தவர்களை ஏற்றுக்கொள்கிறீர்கள், அதே சமயத்தில் தமிழனால்*

கண்டுபிடித்து உலகத்துக்கு வழங்கிய பெரும் செல்வமாகிய சமஸ்கிருதமொழியை —தமிழனால் கண்டுபிடிக்கப்பட்ட மிகச் சிறந்த இணைப்பு மொழியைத் தமிழன் படித்து தமிழன் மேலும் உயரவேண்டும் என்ற உணர்வை ஏற்றுக்கொள்ள இயலாத தங்களுடைய கருத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இன்று தமிழ் நாட்டிலேயே தமிழ் அழிக்கப்பட்டு வருகிறது. மக்களிடம் தமிழ் உணர்வை ஏற்படுத்தி அதன் மூலமாகச் செல்வாக்குப் பெற்றவர்களிலேயே அழிக்கப்பட்டு வருகிறது. சின்னஞ்சிறு தமிழ்க் குழந்தைகளுக்கு அவர்கள் தாய் மொழியாகிய தமிழில் பாடம் சொல்லிக் கொடுக்கப்படவில்லை. எல்.கே.ஜி., யு.கே.ஜி. என்ற வகுப்புகளில் மூன்று நான்கு வயது தமிழ்க் குழந்தைகளுக்கே ஆங்கிலம் போதிக்கப்பட்டு, அவர்கள் தாய் மொழியான தமிழ் மொழியையும் அதன் உயர்வையும், தமிழ் நாட்டுச் சித்தர்களையும் அவர்களின் சிறப்புக்களையும், ஏன் தங்கள் தாய் தந்தையர்களையுமே புறக்கணிக்கும் சூழ்நிலையை தமிழ் நாட்டில் தமிழ்க் குழந்தைகளிடம் உருவாக்கி வருகிறார்கள்.

**கண்டிக்கப்பட வேண்டியது; தடுக்கப்பட வேண்டியது, தவிர்க்கப்பட வேண்டியது தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழைப் போதிக்காமல் எல்.கே.ஜி., யு.கே.ஜி கொடுமையைத்தான்.**

**கண்டிக்கப்பட வேண்டியது. தடுக்கப்பட வேண்டியது இந்தத் தவறான முறை தான். தமிழ் மக்கள் சமஸ்கிருதம் படிப்பதால் தமிழ் தன் தனித்தன்மையை இழந்து விடாது. தமிழ் அப்படி தொட்டால் சுருங்கி தன்மை உள்ள சாதாரண மொழி அல்ல. ஆங்கிலம் படிப்பதன் மூலமாக நமது நாகரீகம், பண்பாடு, நமது ஞானிகள், சித்தர்களின் சிறப்பு எல்லாம் அழிந்து வருகிறது. அப்படி அழிந்துகொண்டு வரும் சூழ்நிலை நகரத்திலும், கிராமத்திலும் வேகமாக சுதந்திரத்திற்குப்பின் அதுவும் சமீப ஆண்டுகளில் உருவாகிக்கொண்டு இருக்கிறது.**

தமிழர்களின் நாகரிகம் எல்லா இனங்களையும், எல்லா உயிர்களையும் நேசிப்பதுதான். தமிழர்கள் தங்களின் அந்த உயர்ந்த பண்பாட்டிலிருந்து இன்று நழுவி வருவதற்குக் காரணம், அவர்கள் தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கும் நூல்களைப் படித்துப் பயன்பெறாமல் இருப்பதுதான் என்று தமிழ் அறிஞர்கள் தங்கள் அனுபவத்திலிருந்து கூறி வருகிறார்கள். எனவே தாங்கள் சொல்வதுபோல் சமஸ்கிருத மொழியில் ஒன்றும் இல்லை என்று தெரிந்து கொள்வதற்காகவாவது சமஸ்கிருதத்தை ஆழ்ந்து படித்தால்தானே தெரிந்துகொள்ள முடியும் ஒரு மொழியைப் பற்றி படிக்காமல் அதைப்பற்றி எப்படி கருத்துக்களைச் சொல்வது?

அதனால் எந்த மொழியின் மீதும் வெறுப்பு உணர்ச்சி இல்லாமல் தமிழ் உணர்வுடன் சமஸ்கிருத மொழியைத் தமிழன் படிப்பதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். தமிழ் மொழியை உலக மொழிகளுக்கு இணையாக பொறிஇயல், மருத்துவம் வான இயல், முதலிய பல்வேறு விஞ்ஞானத் துறைகளையும் தன் உள் கொண்ட மொழியாகத் தமிழை வளர்க்கும் பணியில் ஈடுபடும் முயற்சியில் ஈடுபட்டு உழைக்கும் உணர்வை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதுதான் நமது கடமையாக இருக்கவேண்டும். அதற்குத் தமிழனே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிக நீண்டத் தூரப் பார்வையுடன் உருவாக்கிய மொழியான சமஸ்கிருதத்தையும். அதுபோன்ற பழைய மொழிகளையும் படிப்பது மிகவும் அவசியம் என்பது என் கருத்துமட்டும் அல்ல உலக மொழி ஆய்வாளர்களின் கருத்தும் ஆகும்.

தாங்கள் தமிழ் நாட்டுச் சித்தர்களின் சிறப்பையும், தமிழ் மொழியையும், தமிழ் மக்கள் மத்தியில் பரப்புவதற்கு எடுத்துவரும் முயற்சிக்கு என் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

32-ம் பக்க தொடர்ச்சி

6 பிருமணர்கள் ஆதிசங்கரனின் பின்னால் மறைந்து கொண்டு செயல்படுகிறார்கள் ஆதிசங்கரனே தமிழனென்பதையும்;- ஆதிசங்கரனின் நூல்கள் பதினெண் சித்தர்களின் இலக்கியங்களின் சாரமே யென்பதையும்;- அமராவதி ஆற்றங்கரைக் கருவூரூர் குறிப்பிடும் சேரன் மலைப்பகவதி, மூகாம்பிகை, காளி, திரிசூலி, ஈசுவரி, வனக்கிளி, வனராணி, வனதேவி, மலைமகள, மோகினி, தண்டிணி, மாயை........முதலிய அனைத்துச் சத்திகளையும் அரிய தெய்வத் தமிழால் பூசை செய்து தான் சித்தி பெற்றானென்பதையும் ஆதிசங்கரனை பிருமணர்களே அழித்தார்கள் என்பதையும்:— சங்க இலக்கியங்களும் திருமூலரின் படைப்புக்களும், திருவள்ளுவரின் படைப்புக்களும், திருவாசகமும், தேவாரமுமே ஆதிசங்கரனை உருவாக்கின என்பதையும் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் வாழ்த்தைப்பெற்று வட நாட்டில் இந்துமதம் வளர்க்கச் சென்றவனே ஆதிசங்கரன் என்பதையும்............ வெளிப்படையாக விளக்கித்தான் பிருமணர்கள் ஆதிசங்கரனைக் கேடயமாகவும் அரணாகவும் பயன்படுத்துவதைத் தடுக்க முடியும். அப்பொழுது தான், பிருமணர்களின் வேதமதக் குழப்பங்களையும் ஆரிய மாயைகளையும் அகற்றி உண்மையான இந்து மதம் என்கின்ற சித்தர் நெறியை மறுமலர்ச்சி பெறச் செய்ய முடியும். அப்பொழுது தான், வட ஆரியரின் பிடியிலிருந்து இத்திரு நாட்டு மக்களைக்காப்பாற்ற முடியும்.

---

# "குருபத்தி"

**[தொகுத்து வழங்குபவர் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் பரமாச்சாரியார் நெ. சேவுகன்]**

*சித்தர் நெறிபால் அதிக நம்பிக்கையும், ஈடுபாடும், விருப்பமும், ஆர்வமும் கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற அடியான்கள்: குருதேவர் அவர்களின் கடுமையான கண்டுப்பு வாசகங்கள், சட்ட திட்டங்கள், கட்டிப்பாடுகள்... முதலியவைகளைக் கேட்டவுடனேயே: அரசரடை போட்ட அராபியக் குதிரை போன்ற தங்களின் உள்ளத்தைச் சாட்டையடி பட்டதும் பாயும் குதிரை போன்று குருவை எதிர்த்து நின்றும், மறுத்து நின்றும், பகைத்து நின்றும் செயல்பட்டிடக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது. ஒவ்வொரு அடியானின் உள்ளமும் சாட்டையடிக்கு உட்படாமல் ஓடும் குதிரை போல்: பயணத்துக்குப் பயன்படும் சவாரிக் குதிரையாக விளங்க வேண்டும, குருவின் ஆணைகளைச் சரியாகப் புரியாமலும்: குருவை முழுமையாக உணராமலும் உள்ள அடியான், அடியாள், அடியார்தான் சவாரிக்குப் பயன்படாத சண்டிக்குதிரை போலும், நொண்டிக் குதிரை போலுமாமாவார்கள்.*

**அதாவது, நம்மவர்கள் தெய்வீக உலகையும் புரியாமல், இந்த உலகியலையும் புரியாமல் குழம்பிக் கொண்டிருப்பதால்தான்: ''குரு'' யார்? ''திரு'' யார்? ''தான்'' யார்? என்று உணரமுடியவில்லை. நாம், தரைமேல் நடக்கும் போது போட்டுக் கொள்ளக்கூடிய காலணிகளையும், மேலாடைகளையும் போட்டபடியே நீருக்குள் இறங்கி நீந்துவதென்பது முடியாத காரியம். அப்படியே முயற்சித்தாலும், அது, மிக விரைவில் தொல்லையாகவும்; மேற்கொண்டு நெடுநேரம் நீந்த முடியாதபடியும் செய்துவிடும். அதுபோல, நீருக்குள் நீந்துவதற்காகக் குறைந்த ஆடையுடன் செயல்படுவது போல்; தரைமேல்; அந்த நீச்சல் உடையுடன் எல்லா இடங்களுக்கும் செல்ல முடியாது. இந்த உவமையை ஒவ்வொருவரும் எண்ணிப்பார்த்தால்; ''தெய்வீக உலகில் செயல்படுபவனால், இந்த உலகியலில் முழுமையாகச் செயல்பட முடியாது என்பதை-யும்; இந்த உலகியலில் முழுமையாகச் செயல்படுபவனால், தெய்வீக உலகில் முழுமையாகச் செயல்பட முடியாது'' என்பதையும் புரிந்து கொள்ளலாம்.**

இந்த உலகியலுக்குரிய நெறி, சட்டம், முறை, பந்தம், சொந்தம், பாசம், ஆசை, வெறுப்பு, விருப்பு ......முதலியவைகளை மதிக்கின்றவன், போற்றுகின்றவன் தெய்வீக உலகியலை நம்பமுடியாது, ஏற்கமுடியாது, ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில், தெய்வீக உலகியலின் நெறியும், சட்டமும், முறையும், பந்தமும், சொந்தமும், பாசமும், ஆசையும், வெறுப்பும், விருப்பும்........முற்றிலும் புதியன்வ, நம்பமுடியாதவை, எவராலும் ஏற்கமுடியாதவை, எவராலும் எளிதில் ஒப்புக்கொள்ள முடியாதவை. எனவே தான் வெளியில் சொல்லவோ, செயல்படுத்தவோ முற்பட்டுப் பல்வேறு தொல்லைகளை ஏற்பதைவிட; எதையுமே வெளியில் சொல்லாமல் கைகால் மடக்கிக்கண்மூடி, வாய்பூதைத்துத் தனிமைமிகு தவக்கோலத்தையே தெய்வீக உலகப் பெரியார்கள் பெரிதும் விரும்பியேற்றிட்டனர் யாரோ ஒரு சிலர்தான் எப்பொழுதாவது தங்களின் அநுபவங்களை வெளியில் கூறவும், செயல்படுத்தவும் முற்பட்டிட்டனர். அப்படித் தங்களின் அடைவுகளைப் பிறருக்கு வழங்க முற்பட்டவர்கள் மிகவிரைவில் தொல்லைகளை ஏற்று இறுதி பெற்றனர். இக் கலிகாலத்தில், நமக்கெல்லாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, ஞானச்சாரியாக, ஞாலகுருவாக, ஞானத் தந்தையாக, இந்து மதத்தந்தையாக குருகா சன்னிதானம் சித்தர் கருவூரூர் அவர்கள் குருவாக வந்து பத்தி, சத்தி, சித்தி முத்தி, நிலைகளில் தேர்ச்சி பெறவும்; தரம், திறம், விதி, ஊழ்வினை, ஆள் வினை, சூழ்வினை, இவைகளின் அடிப்படையில் கடவுள், ஆண்டவர், தெய்வம், தேவர், விண்ணவர், அமரர்........என்ற நாற்பத்தெட்டு வழிபடு நிலைத்தகுதிகளில் உரியநிலையைப் பெறவும்; மறைகளையும், முறைகளையும், நெறிகளையும் வேதங்களையும் கற்றுணரவும்; ''வாருங்கள் மானுடரே உங்களைக் கடவுள்களாக ஆக்குகிறோம்-'' என்று கூவி அழைத்தும் அருள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் பேரருள் வள்ளல் பெருமான் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறேன், எனவே, அன்புகூர்ந்து இவைகளையெல்லாம் எண்ணிபார்த்து மிகமிக நிதானமாக, பொறுமையாக, அறிவு நுணுக்கத்துடன் செயல்படுங்கள்.

பிறர் உங்களை நம்பவேண்டும் அல்லது புகழ வேண்டும் என்பதற்காகக் தெய்வீக அநுபவங்கள் அனைத்தையும் ஒளிவுமறைவின்றி வெளியில் சொல்லி விடாதீர்கள். அது, உங்களுக்கு எல்லையில்லாத தொல்லைகளை விளைவித்திடும்.

''சொல்லாதே யாரும் கேட்டால்
எல்லாரும் தாங்க மாட்டார்'' — என்ற

இருபதாம் நூற்றாண்டு இன்னிசைக் கவிஞனின் கவிதை வரிகளை நினைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், இறைவனே அறுபத்து நான்கு முறை நேரில் தோன்றி அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்தும் உணர்ந்து கொள்ளாத, புரிந்து கொள்ளாத, நம்பாத, ஏற்றுக்கொள்ளாத மக்களே நமது சமுதாயத்தவர்கள். எனவே, யானையைபார்க்காதவனிடம் யானையைப்பற்றி விளக்கம் சொல்லி விளங்க வைக்க முடியாது பிறவிக் குருடனிடம் பாலின் வெண்மையை விளக்கக் கொக்கின் நிறத்தை உவமையாகக் கூறி விளக்க முடியாது சர்க்கரையின் இனிப்பை வெறும் சொற்களால் விளக்கிப் புரியவைக்க முடியாது. இவை போலத்தான் தெய்வீகப் உலகப் பேருண்மைகளை வெறும் சொற்களால் விளக்கிப்புரியவைக்க முடியாது. அவரவர் அநுபவத்தாலன்றி உணரப்பட முடியாதவைகள் என்று பல உண்டு. இதனை முழுமையாக உணர்ந்துதான் நீங்கள் செயல்பட வேண்டும்.

''எல்லாவற்றையும் சொல்ல முடியாது,
சொல்வன வற்றையெல்லாம் எழுத முடியாது,
எழுதுவன வற்றையெல்லாம் செய்ய முடியாது,
செய்வன வற்றையெல்லாம் பிறருக்குக் காட்ட முடியாது
காட்டுவன வற்றையெல்லாம் பிறர் உணர முடியாது''

என்ற ஐந்தே சித்தர்களின் குருபாரம்பரிய அறிவுரையாகும்.

# சங்கரர் வரலாறு



மதுரை கண்டப்பக் கோட ... சித்தர் ஏளனம்பட்டியார் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் பற்றிய குறிப்ப ... வாருகத் தொகுத்து நிலக்கோட்டைக்கு அருகிலுள்ள கொண்டயம்பட்டி, ... , அய்யன் பாளையம்.........போன்ற இடங்களில் குகைகளிலும் நில ... பாதுகாத்திட்டார். அவர் எழுதிய குறிப்புகளிலிருந்து...'.........

"........பல முறை நான்கு ... ரின் பீடங்களுக்கும் சென்றேன். யாருக்கும் இந்து மதத்தைப் பற்றி ... ராகத் தெரியவில்லை இவர்களுக்குக் குருபாரம்பரியம் குறிக்கும் தென்பாண்டித் தமிழன், ஞான சித்தன். உச்சிக்குடுமியான், வெள்ளாடையான், மந்திர சித்தியான் ஆதிசங்கரன் பற்றி ஏதும் தெரியவில்லை, – ஆதி சங்கரன் முதலாம் விசயாலயனின் அருளாட்சி முயற்சிக் காலத்தில் வாழ்ந்தவன். தென்னாட்டைக் காவிரியாற்றங்கரைக் கருவூரார் பௌத்தம், சமணம், வட ஆரிய வேத மதம்.....முதலியவைகளிலிருந்து காத்திடுவாரென்பதுணர்ந்து அவரின் அருளில் வடநாடு சென்றவனே ஆதி சங்கரன் இவன், வடநாட்டவற்காகவும் வட ஆரியர்களைத் திருத்துவதற்காகவுமே சமசுக்கிருத மொழியில் சித்தர்களின் உண்மையான இந்துமதத் தத்துவத்தை எழுதினான். ஆனால், முதல்யுகச் சிவன் பிறமண் திருமால் முருகன்....... முதலியோர்களையும்; இரண்டாம் யுக இராமனையும் அவனோடு தொடர்புடையார்களையும்; மூன்றும் யுகக் கண்ணனையும் அவனோடு தொடர்புடையவர்களையும்....... நான்காம் யுகம் பிறந்து இரண்டாயிரமாண்டு கழித்தே இத்திருநாட்டுக்கு வந்த பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய குலத்தவராக, மொழிக்காரராக, வேத மதத்தவராகப் பொய்கூறி உரிமை பாராட்டிக் கதைகளும் புராண இதிகாசங்களும் புனைந்தது போல் ஆதிசங்கரனையும் தங்களுடைய இனத்தானாக ஆக்கி விட்டார்கள். இந்தப் பிருமணர்களே ஆதி சங்கரனையும், அருணகிரியையும், மௌன குருவையும், தாயுமானவரையும்........அழித்தனர்.

இந்தப் பிருமணர்களால் வடலூர் அருட் பெருஞ்சோதி அருட்கொடை வள்ளல் பெருமான் அருட்பா வழங்கிய ஞான சித்தன் இராமலிங்கத்தை மட்டும் ஒன்றும் செய்ய முடியவில்லை இருந்தாலும், இவர்கள் மத வெறிகளையும் சாதி வெறிகளையும், தீண்டாமை வெறிகளையும்........தூண்டி விட்டு மக்களை என்றென்றும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டு மடிபவர்களாக்கித் தாங்கள் மட்டும் அவர்களின் நிலையான தலைவர்களாகவே இருந்து சுரண்டி வாழ வழிசெய்து விட்டார்கள். எனவே, சாதிகளை ஒழிப்பதும்; மத ஒற்றுமை உருவாக்குவதும் தீண்டாமைக் கருத்தே இல்லாமல் செய்வதும்; பதினெட்டு வகைக் காடுகளிலும் உள்ள நாற்பத்தெட்டு வகையான உருவ, அருவ, அருவுருவங்களைப் புத்துயிர்ப்புச் செய்வதும்; நாற்பத்தெட்டு வகையான கருவறை மூலவர்களையும், அருளாளர்களையும், மருளாளர்களையும் அநுபவப் பூர்வமான அருளூற்றுக்களாக மாற்றுவதுமே ...... பிறமண்ணினரான பிருமணர்களை அடக்கி யொடுக்கி உரிய நிலைக்குக் கொண்டு செல்லும். இல்லையேல், பீடாதிபதிகளின் பூசைகளில் அவிர்ப்பலியாகி அனைத்து தமிழின துரோகிகளும் விரோதிகளும் கூண்டோடும் பூண்டோடும் ஒழிய நேரிடும். அதுவே, தவிர்க்க முடியாத நிலை........''

தொடர்ச்சி 30-ம் பககம பார்க்கவும்

தமிழினச் செழுச்சியே இந்து மத மறுமலர்ச்சி!

# பொருளுலக இருளகற்ற அருளாட்சி அமைப்போம்!

மனித வாழ்வே- புனித வாழ்வு!



ஞாலகுரு சித்தர் கருவூரர்

ஞானச்சாரியார், இந்து மதத் தந்தை
12வது பதினெண் சித்தர் பீடாதிபதி
குருமகா சன்னிதானம்

தலைவர், 'குருதேவர்
இந்து மறுமலர்ச்சி இயக்கம்
அருட்பணி விரிவாக்கத் திட்டம்
தந்தை பெரியார் திராவிடர் கழகம்
மற்றும் பன்னிரண்டு அமைப்புக்கள்